# தினபூமி

thinaboomi.com


பூமி: 30 சுற்று : 237 வைகாசி 22

TN-TVL/25/2012-2014

நெல்லை, வியாழன், ஜூன் 05, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**தீவிர நோய் பரப்பும் பூஞ்சை: அமெரிக்காவுக்கு கடத்திய 2 சீன விஞ்ஞானிகள் கைது**
...2-ம் பக்கம்

**ஓய்வுக்குப் பிறகு அரசாங்க பதவியை ஏற்க மாட்டேன்: தலைமை நீதிபதி கவாய் உறுதி**
...3-ம் பக்கம்

**18 ஆண்டுகளுக்கு பிறகு சாம்பியன்: பெங்களூரு அணி வீரர்களை நேரில் வரவேற்ற கர்நாடக துணை முதல்வர்**
...6-ம் பக்கம்






● முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அஜைல் ரோபோட்ஸ் நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் தொழிற்பூங்காவில்

# ரூ.300 கோடியில் 'ரோபோடிக்' பாகங்கள் உற்பத்தி ஆலை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஜூன் 05-

**ராணிப்பேட்டை சிப்காட்டில் ரூ.175 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள காற்று பிரித்தெடுப்பு ஆலையை முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், மேலும், ராணிப்பேட்டை சிப்காட்டில் எஸ்.ஓ.எல். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 175 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்துள்ள காற்று பிரித்தெடுப்பு ஆலையையும் காணொலிக் காட்சி வாயிலாக அவர் திறந்து வைத்தார்.**

**6 மாணவர்களுக்கு...**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அஜைல் ரோபோட்ஸ் நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு உள்ளகப்பயிற்சி அளிப்பதற்கான கடிதங்களை வழங்கினார்.

**காற்று பிரித்தெடுப்பு....**

மேலும், ராணிப்பேட்டை சிப்காட்டில் எஸ்.ஓ.எல். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 175 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்துள்ள காற்று பிரித்தெடுப்பு ஆலையையும் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

**ஆய்வறிக்கையில்...**

தமிழ்நாடு, இந்தியாவிலேயே 2-வது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, 2024-25ம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு, 2024-25ம் ஆண்டில் 9.69 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது. இது, கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சியாகும்.

**முதலீடுகளை ஈர்க்க...**

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு, அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கி,
(கடைசி பக்கம் பார்க்க)

### பரந்தூர் விமான நிலைய அடுத்தகட்ட பணிகள் குறித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, ஜூன் 05-

**பரந்தூர் விமான நிலையம் தொடர்பாக அடுத்தகட்டமாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அதிகாரிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் தொழிற்துரை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.**

சென்னையின் 2-வது புதிய விமான நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் பகுதியில் அமைக்கப்பட உள்ளது. இந்த திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடங்கி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. பரந்தூர் மற்றும் அதன் சுற்றியுள்ள 13 கிராமங்களில் இருந்து மொத்தமாக 5,746 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. பரந்தூர் விமான நிலையம் அமைக்கும் பணிகளை மாநில அரசுக்கு சொந்தமான தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டு கழகம் (டிட்கோ) மேற்கொண்டு வருகிறது. பரந்தூர் விமான நிலையம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி கிராம மக்கள் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே பரந்தூர் விமான நிலையம் அமைப்பது தொடர்பாக திட்ட அனுமதிக்காக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்திடம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. இதனை பரிசீலித்த ஆணையம் திட்ட அனுமதிக்கான கொள்கை அளவிலான ஒப்புதலை கடந்த ஏப்ரல் மாதம் வழங்கியது.

இந்த நிலையில், பரந்தூர் புதிய விமான நிலைய திட்டம் தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முக்கிய ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆலோசனையில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் துறை செயலாளர் மற்றும் அரசின் முக்கிய அதிகாரிகள், டிட்கோ அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அடுத்தகட்டமாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக அதிகாரிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. விமான நிலையம் அமைப்பதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை மத்திய அரசு வழங்கிய நிலையில், அதன் கட்டுமான பணிகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்? என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும்? என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

# பார்லி. மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 21-ம் தேதி தொடங்குகிறது

புதுடெல்லி, ஜூன் 05-

**இந்த ஆண்டுக்கான பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 12 வரை நடைபெற உள்ளது என பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.**

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 12 வரை நடைபெறும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஏப்ரல் 22-ம் தேதி பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலால் 26 பேர் கொல்லப்பட்டனர், அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் நடத்தப்பட்ட பிறகு பாராளுமன்றம் கூடுவது இதுவே முதல் முறை ஆகும்.

ஆபரேஷன் சிந்தூர் பற்றி விவாதிக்க எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறப்பு பாராளுமன்றக் கூட்டத்தொடரை நடத்த வேண்டும் என வலியுறுத்திய நிலையில், தற்போது மழைக்கால கூட்டத்தொடருக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விதிகளின் கீழ், மழைக்கால கூட்டத்தொடரின் போது அனைத்துப் பிரச்சினைகளையும் விவாதிக்கலாம் என்று பாராளுமன்ற விவகார அமைச்சர் கிரண் ரிஜிஜூ எதிர்க்கட்சிகளின் கோரிக்கை குறித்த கேள்விக்கு பதிலளித்தார்.

பஹல்காம் தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் ஆகியவை இந்த அமர்வின் முக்கிய விவாதப் புள்ளிகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், டெல்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி யஷ்வந்த் வர்மாவுக்கு எதிரான பதவி நீக்கத் தீர்மானமும் மழைக்காலக் கூட்டத்தொடரின் போது பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை கால

# முன்பணம் ரூ.6 ஆயிரமாக உயர்த்தி வழங்க அரசு அரசாணை வெளியீடு

சென்னை, ஜூன் 05-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்புக்கு இணங்க ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம் ரூ.4000-ல் இருந்து ரூ.6000 ஆக உயர்த்தி வழங்குவதற்கான தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.**

முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த ஏப்ரல் மாதம் 28-ம் தேதி சட்டசபையில் விதி எண் 110-ன் கீழ் மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கான முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அன்று சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடிட தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், ரூ.4000-ல் இருந்து ரூ.6000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் 10 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும் எனத் தெரிவித்திருந்தார்.

அன்றைய தினமே, தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட "சி" மற்றும் "டி" பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.500ல் இருந்து ரூ.1000 ஆக இனி உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால் சுமார் 4 இலட்சத்து 71 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் சுமார் 24 கோடி ரூபாயாக இருக்கும். எனத் தெரிவித்திருந்தார். அதன்படி, தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோல், சி மற்றும் டி பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழக அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பொங்கல் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில், பண்டிகை முன்பணம் உயர்வு இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும். இந்த உத்தரவு வெளியிடப்பட்ட நாளுக்கு பிறகு கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கு பொருந்தும். இப்பண்டிகை முன்பணமானது பத்து மாதங்களுக்கு சமமான தவணைகளில் பிடித்தம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வெற்றிக்கொண்டாட்டத்தில் சோகம்:

# பெங்களூரு வீரர்களை காண திரண்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலி

பெங்களூரு, ஜூன் 05-

**சாம்பியன் கோப்பையுடன் திரும்பிய பெங்களூரு அணி வீரர்களை காண ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான ரசிகர்கள் கூடியதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில், சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். மேலும் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.**



நேற்று முன்தினம் நடந்த பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பஞ்சாப் அணியை தோற்கடித்து பெங்களூரு அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. 18 ஆண்டு கால பிரீமியர் லீக் வரலாற்றில் முதல்முறையாக பெங்களூரு மகுடத்தை சூடியது. இதனை பெங்களூரு அணி ரசிகர்கள் திருவிழா போல கொண்டாடி வருகின்றனர். இந்த நிலையில், கோப்பையை வென்ற பெங்களூரு அணியினர் நேற்று சொந்த ஊருக்கு திரும்பினர். அவர்களை கர்நாடகா துணை முதல்வர் சிவகுமார் விமான நிலையத்திற்கே சென்று வரவேற்றார். தொடர்ந்து, கோப்பையை ஏந்தியபடி கோலி பேருந்தில் அமர்ந்த நிலையில், பெங்களூரு வீரர்கள் ஊர்வலமாக சென்றனர். நேற்று மாலை சின்னசாமி மைதானத்தில் வீரர்களை கவுரவிக்க அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதையொட்டி, அங்கு ஆயிரக்கணக்கானோர் ஒரே சமயத்தில் திரண்டனர்.

இதனால் கூட்டநெரிசல் ஏற்பட்டது. பலர் மயங்கி விழுந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியவில்லை. இதனால், கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். பலர் மயக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 15க்கும் மேற்பட்டோரின் நிலை கவலைக்கிடம் என்று கூறப்படுகிறது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

### அச்சிட்ட காகிதங்களில் வழங்கக்கூடாது உள்ளிட்ட

# 14 புதிய வழிகாட்டு நெறிமுறைகள்: உணவு பாதுகாப்பு துறை வெளியீடு

சென்னை, ஜூன் 05-

**அச்சிட்ட காகிதங்களில் உணவுப் பொருளை வழங்கக்கூடாது உள்ளிட்ட 14 வழிகாட்டு நெறிமுறைகளை உணவு பாதுகாப்பு துறை வெளியிட்டுள்ளது.**

உணவு பாதுகாப்பு துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள 14 வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு:-

அனைத்து உணவு வணிகர்களும் https://foscos.fssai.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து, உணவு பாதுகாப்பு உரிமம் அல்லது பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அனைத்து உணவு வணிக நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு டைபாய்டு மற்றும் மஞ்சள் காமலை உள்ளிட்ட நோய்களுக்கு எதிராக தடுப்பூசி செலுத்தி, மருத்துவத் தகுதி சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.

உணவு வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தண்ணீரை பகுப்பாய்வு செய்து, பகுப்பாய்வறிக்கை வைத்திருக்க வேண்டும். உணவுப் பொருட்களை ஈக்கள்/பூச்சிகள் மொய்க்காத வண்ணம் கண்ணாடி பெட்டியில் மூடி வைத்து, காட்சிபடுத்த வேண்டும். உணவு எண்ணெயை ஒருமுறை மட்டுமே சமைக்கப் பயன்படுத்த வேண்டும். மீதமான பயன்படுத்திய உணவு எண்ணெயை, எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. (FSSAI) அங்கீகரித்த கொள்முதலாளருக்கும் மட்டும் விற்க வேண்டும். விற்பனையாகாமல் மீதமான உணவை நுகர்வோருக்கு வழங்காமல் அப்புறப்படுத்திட வேண்டும்.

நியூஸ் பேப்பர் போன்ற அச்சிட்ட காகிதங்களில் உணவுப் பொருளில் நேரடியாகப் படும் வகையில் பரிமாறவோ /பொட்டலமிடவோ கூடாது. அனுமதிக்கப்படாத நெகிழியில் (பிளாஸ்டிக்) உணவுப் பொருட்களை சூடாகவோ அல்லது இயல்பு நிலையிலோ பொட்டலமிடக்கூடாது.

உணவகங்களில் உணவு பரிமாற வாழை இலை அல்லது அனுமதிக்கப்பட்ட பார்ச்மெண்ட் பேப்பர்/அலுமினியம் பாயில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அனுமதிக்கப்படாத நெகிழியினை (ப்ளாஸ்டிக்) பயன்படுத்தக்கூடாது.

எவ்வகை உணவு எண்ணெய்களையும் லேபிள் விபரங்களின்றியும் பொட்டலமிடாமல் சில்லறை அடிப்படை அடிப்படையிலும் நுகர்வோருக்கு விற்பனை செய்தல் கூடாது. உணவைக் கையாளுபவர்கள் கையுறை மற்றும் தலைமுடி கவசம் போன்றவற்றைத் தவறாமல் அணிய வேண்டும். பொட்டலமிடப்பட்ட உணவுப் பொருட்களை கொள்முதல் விற்பனை செய்யும் போது, FSSAI உரிம எண்ணுடன் கூடிய முழுமையான லேபிள் விபரங்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.


உணவு சமைக்க மற்றும் நொறுக்குத் தீனிகள் தயாரிக்க அயோடின் கலந்த உப்பு மட்டுமே பயன்படுத்த வேண்டும். உணவகங்கள்/பேக்கரி/இனிப்பகங்கள் உள்ளிட்ட உணவு நிறுவனங்களில் அயோடின் கலக்காத உப்பு இருக்கக்கூடாது. சிக்கன்-65. பஜ்ஜி, கோபி-65 போன்ற உணவுப் பொருட்களில் செயற்கை நிறமிகள் சேர்க்கக் கூடாது. உணவு வணிகர்கள் அனைவரும் இவ்வறிவிப்பைக் கண்ட 14 தினங்களுக்குள் மேற்கூறியவற்றை தவறாது பின்பற்றிட வேண்டுமென அறிவிக்கப்படுகின்றது. தவறும்பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்பின்றி உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 260.74 | 77.70 |
| பாயிண்ட் 80,998.25 | பாயிண்ட் 24,620.20 |



**தங்கம்**
1 சவரன் ₹72,720
1 கிராம் ₹9,090



**வெள்ளி**
1 கிலோ ₹114,000
1 கிராம் ₹114.00

**டாலர்** ₹85.83

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### தீவிர நோய் பரப்பும் பூஞ்சையை

# அமெரிக்காவுக்கு கடத்திய 2 சீன விஞ்ஞானிகள் கைது

**டெட்ராய்டு, ஜூன் 05-**

விவசாய பயிர்களை அழித்து மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் ஆபத்தை விளைவிக்கும் அபாயகரமான பூஞ்சையை அமெரிக்காவுக்கு கடத்திய இரண்டு சீன விஞ்ஞானிகள் கைது செய்யப்பட்டனர்.



சீனாவை சேர்ந்த விஞ்ஞானிகளான 33 வயதான யுன்கிங் ஜியான் மற்றும் 34 வயதான ஜுன்யோங் லியு ஆகியோர் ஃபுசேரியம் கிராமினேரம் என்ற பூஞ்சையை விமானம் மூலமாக அமெரிக்காவுக்கு கடத்தியதற்காக கைதாகியுள்ளனர்.

லியு, டெட்ராய்ட் பெருநகர விமான நிலையம் வழியாக அமெரிக்காவிற்குள் பூஞ்சையை கடத்தியுள்ளார். அவர் தனது காதலி ஜியான் பணிபுரிந்த மிச்சிகன் பல்கலைக்கழக ஆய்வகத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்காக இந்த பூஞ்சையை கடத்தியதாக ஒப்புக்கொண்டார். அதேபோல, லியு இந்த நோய்க்கிருமி ஆராய்ச்சியை நடத்தும் ஒரு சீன பல்கலைக் கழகத்தில் பணிபுரிகிறார் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

லியு அபாயகரமான இந்த பூஞ்சையை கடத்துவதை அறிந்த எஃப்பிஐ அவரை கைது செய்தது. இது குறித்து பேசிய எஃப்பிஐ தலைவர் காஷ் படேல், "இந்த பூஞ்சை வேளாண் பயங்கரவாத ஆயுதம். இந்த பூஞ்சை பயிர்களில் தலை கருகல் நோயை ஏற்படுத்தும். இது உலகளவில் பில்லியன் கணக்கான இழப்புகளுக்கு காரணமான ஒரு பேரழிவு தரும் பயிர் நோயாகும். இது மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் குறிப்பிடத்தக்க சுகாதார அபாயங்களை ஏற்படுத்துகிறது.'' எனத் தெரிவித்தார்.

இந்த நோய்க்கிருமி உலகளவில் பில்லியன் கணக்கான டாலர் பயிர் இழப்புகளுக்கு காரணமாக இருந்து வருகிறது. இது கோதுமை, பார்லி, சோளம் மற்றும் நெல் பயிரை பாதிக்கும் ஒரு அழிவுகரமான பயிர் நோயாகும். இப்பூஞ்சை மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் தீங்கு விளைவிக்கும் மைக்கோடாக்சின்களை உருவாக்குகிறது. இந்த பூஞ்சை மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் வாந்தி, கல்லீரல் பாதிப்பு மற்றும் இனப்பெருக்க குறைபாடுகளை ஏற்படுத்தும் ஆபத்தை ஏற்படுத்துகிறது.

# ஏறுமுகத்தில் தங்கம் விலை

**சென்னை, ஜூன் 05-**

தங்கம் விலை இந்த வாரத் தொடக்கத்திலிருந்தே உயர்ந்து வருகிறது. அந்தவகையில் நேற்று (புதன்கிழமை) சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் விலை உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,090-க்கு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. அமெரிக்கா - சீனா இடையே நிலவிய வர்த்தகப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, தங்கம் விலை மே 12-ம் தேதி ரூ. 2,360 வரை குறைந்து, ரூ.70,000-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதன்பிறகு, தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வந்தது. மே 28-ம் தேதி முதல் மீண்டும் தங்கம் விலை உயரத் தொடங்கியது.

இந்நிலையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜூன் 4) கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,090-க்கும், பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ஒரு பவுன் ரூ.72,720-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் ஒரு கிராம் ரூ.1 அதிகரித்து ஒரு கிராம் வெள்ளி ரூ.114-க்கு விற்பனையானது.



**முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அஜைல் ரோபோட்ஸ் நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்து, பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு உள்ளகப்பயிற்சி அளிப்பதற்கான கடிதங்களை வழங்கினார்.**

# சீனாவில் நிலநடுக்கம்

**பெய்ஜிங், ஜூன் 05-**

சீனாவில் ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சீனாவில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 4.43 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 4.2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 33.73 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 81.99 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

### மூளையை தின்னும் அமீபா தாக்குதல்:

# கேரளாவில் 3 குழந்தைகள் பாதிப்பு

**திருவனந்தபுரம்,ஜூன் 05-**

கேரளாவில் கோயில் குளத்தில் மூளையை தின்னும் அமீபாவின் எச்சங்கள் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. பாதிக்கப்பட்ட 3 குழந்தைகள் மருத்துவமனையில் உள்ளனர்.

இதுபற்றிய விவரம் வருமாறு; நெடுமங்காடு கரிப்பூரில் முகவூர் மகாவிஷ்ணு கோயில் உள்ளது. இங்குள்ள குளத்தில் குளித்த 3 குழந்தைகள் உடல்நலம் பாதிக்கப்பட்டதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர்கள் மூன்று பேரும் மூளையை தின்னும் அமீபாவின் தாக்குதலுக்கு ஆளாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆய்வக பரிசோதனையில் மூளையை தின்னும் அமீபா நுண்ணுயிரிகள் இருப்பது தெரிய வந்தது. இந்த விவரம் வெளியானதை அடுத்து, மக்கள் மத்தியில் பீதி நிலவியது. நகராட்சியின் அலட்சியம், சுகாதாரத் துறை அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் இந்த சம்பவத்தை மூடி மறைப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.

பொதுமக்களின் கடும் குற்றச்சாட்டுகள் எதிரொலியாக, கோயில் குளத்தில் மாதிரிகளை அதிகாரிகள் பரிசோதனைக்காக சேகரித்தனர். பின்னர் நடத்தப்பட்ட பகுப்பாய்வு சோதனையில் அந்த குளத்தின் நீரில் மூளையை தின்னும் அமீபா எச்சங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந் நிலையில் தற்போது பாதிக்கப்பட்ட 3 குழந்தைகளின் உடல்நிலை மோசம் அடைந்ததால் திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு நடத்தப்பட்ட சோதனையில் அமீபிக் மெனிங்கோ செபாலிடிஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இது குறித்து சுகாதாரத் துறை உயரதிகாரிகளுக்கு தகவலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஈரானில் காணாமல் போன மூன்று இந்தியர்கள் மீட்பு

**புதுடெல்லி, ஜூன் 05-**

ஈரானில் காணாமல் போன மூன்று இந்தியர்கள் தெஹ்ரான் போலீஸாரால் மீட்கப்பட்டதாக இந்தியாவில் உள்ள ஈரானிய தூதரகம் தெரிவித்துள்ளது.




ஈரானில் காணாமல் போன மூன்று இந்தியர்களை தெஹ்ரான் போலீஸார் கண்டுபிடித்து விடுவித்ததாக ஈரானில் உள்ள உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன என்று ஈரான் தூதரகம் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளது.

முன்னதாக, மூன்று இந்தியர்கள் கடத்தப்பட்டதாக மே 1 அன்று தெஹ்ரான் போலீஸாரிடம் புகார் அளிக்கப்பட்டது. பஞ்சாபைச் சேர்ந்த மூன்று பேரும் ஆஸ்திரேலியா செல்லும் வழியில் மே 1 அன்று ஈரானுக்கு வந்திருந்தனர். ஒரு உள்ளூர் பயண நிறுவனம் அவர்களுக்கு ஆஸ்திரேலியாவில் நல்ல ஊதியம் தரும் வேலைகளை பெற்றுத்தருவதாக உறுதியளித்திருந்தது. இருப்பினும், ஈரானை அடைந்த சிறிது நேரத்திலேயே அவர்கள் 3 பேரும் காணாமல் போனார்கள்.

இந்த வழக்கு விசாரணையில் இருப்பதாக இந்தியாவில் உள்ள ஈரானிய தூதரகம் மே 29 அன்று தெரிவித்திருந்தது. மூன்று இந்தியர்களின் வழக்கை ஈரானின் வெளியுறவு அமைச்சகத்தின் தூதரக விவகாரத் துறை, தொடர்புடைய நீதித்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து தொடர்ந்து விசாரித்து வருவதாக ஈரான் தூதரகம் தெரிவித்தது. இதனையடுத்து தெற்கு தெஹ்ரானில் அமைந்துள்ள வரமின் என்ற நகரத்தில் மூன்று பேரும் மீட்கப்பட்டனர்.

### வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை:

# தென்கொரிய புதிய அதிபர் அழைப்பு

**சியோல், ஜூன் 05-**

வடகொரியாவுடன் பேச்சுவார்த்தைக்கு தென்கொரிய புதிய அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

தென்கொரியாவில் அதிபராக செயல்பட்ட யூன் சுக் இயோல் கடந்த ஆண்டு டிசம்பரில் ராணுவ அவசர நிலை அறிவித்தார். இதையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இடைக்கால அதிபராக ஹான் டக் சூ நியமிக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து தென்கொரியாவில் அதிபர் தேர்தல் அறிவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் நடந்த அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் லி ஜே மியுங் வெற்றிபெற்றார். இதையடுத்து அவர் அதிபராக பதவியேற்றார். இந்நிலையில், அதிபராக பதவியேற்றப்பின் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய லி ஜே மியுங், வடகொரியாவுடன் அமைதி பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளார். அதேவேளை, வடகொரியா அத்துமீறி செயல்பட்டால் அமெரிக்காவுடனான ராணுவ நட்பு மூலம் பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ம.பி.யில் விபத்து - 9 பேர் பலி

**ஜபுவா, ஜூன் 05-**


மத்தியப் பிரதேசத்தின் ஜபுவா மாவட்டத்தில் சிமெண்ட் ஏற்றப்பட்ட லாரி, வேன் மீது கவிழ்ந்ததில் ஒன்பது பேர் உயிரிழந்தனர், இரண்டு பேர் காயமடைந்தனர் என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

ஜபுவா மாவட்டத்தின் மேக்நகர் தாலுகாவுக்கு உட்பட்ட சஞ்சேலி எனும் இடத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. பாவ்புரா என்ற பகுதியில் நடந்த திருமண விழாவில் பங்கேற்ற இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர், ஷிவ்கர் மஹுதா என்ற தங்கள் கிராமத்துக்கு வேனில் வீடு திரும்பிக்கொண்டிருந்துள்ளனர்.

அவர்கள் வேன், அதிகாலை 2.30 மணி அளவில் சஞ்சேலி ரயில் மேம்பாலம் அருகே வந்தபோது, மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த சிமெண்ட் ஏற்றப்பட்ட லாரி கவிழ்ந்து வேன் மீது விழுந்துள்ளது. இதில், வேனில் பயணித்த 11 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களில் ஐந்து பேர் சிறுவர்கள். ஜபுவா காவல் கண்காணிப்பாளர் பத்மவிலோச்சன் சுக்லா இதனை தெரிவித்துள்ளார்.

இறந்தவர்கள் முகேஷ் கபேத் (40), சவ்லி கபேத் (35), வினோத் கபேத் (16), பயல் கபேத் (12), மதி பமானியா (38), விஜய் பமானியா (14), காந்தா பமானியா (14), ராகினி (9) மற்றும் அக்லி பர்மர் (35) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜபுவா காவல் கண்காணிப்பாளர், உடல்கள் பிரேத பரிசோதனைக்காகவும், காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காகவும் தாண்ட்லா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறினார்.

**05-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** திருமண வாய்ப்புகள் உருவாகும். கூட்டாளி அல்லது மனைவி மாற்றங்களையும், பயணங்களையும் விரும்புவார். குறுகிய கண்ணோட்டம், மனதில் பொறாமை நிலவும்.

**ரிஷபம்:-** மகிழ்ச்சிகரமான மணவாழ்க்கை, பெற்றோரால் இலாபம் ஆகியவை ஏற்படும். வீடு, வாகனம் மற்றும் வயல்களில் ஆதாயம் உண்டு. ஏமாற்றங்களும் ஏற்படலாம்.

**மிதுனம்:-** தொழில், வியாபாரம் சம்பந்தமாக வாங்கிய கடன்களை கேட்டு கெடுபிடி செய்வார். தாயிடம் தர்க்கத்தை தவிர்த்து இனிமையாகப் பேசும். பணி மாற்றம் ஏற்படலாம்.

**கடகம்:-** குழந்தைகளுடன் குழந்தையாய் கொண்டாடி மகிழ்வீர்கள். பங்குச் சந்தை ஆர்வம் கூடும். அழகிய மனைவி அமைவாள். நல்ல ஆலோசகராக திகழ்வீர்கள். வெற்றி உண்டு.

**சிம்மம்:-** பொதுவாழ்க்கை, தொழில் அல்லது வியாபாரத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழலாம். புகழ் ஓங்கும். பெரியோரைப் போற்று வார்கள். சொத்து சேரும்.

**கன்னி:-** கல்வியில் சிறக்கும். எந்த விஷயத்திலும் மனம் முழுமையாக ஈடுபடும். எப்போதும் விழிப்புடன் செயல்படுவீர்கள். பொது வாழ்க்கை மற்றும் பயண ஆர்வம் ஏற்படும்.

**துலாம்:-** பணவரவுகள் தாமதப்படும். தாய், மனைவி போன்ற பெண்களால் வீண் செலவுகள் ஏற்படும். இனிய பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். கல்வியில் தடைகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:-** கற்பனை வளம் பெருகும். தொழில், வியாபாரத்தில் தனவரவு கூடும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். காதில் பிரச்சனை எழலாம். வாக்கால் வளம் பெருகும்.

**தனுசு:-** தொழில் புரிவோருக்கு வீண் செலவுகள், பணமுடையும் ஏற்படலாம். உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். சினத்தைக் குறைத்தால் சிக்கல்கள் தீரும்.

**மகரம்:-** உங்கள் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உறுதி. வீரதீரச் செயல்கள் மற்றும் சாகசங்கள் புரிவீர்கள். செல்வநிலை உயரும். புதிய ஆபரணங்கள் சேரும். நண்பர்கள் உதவி உண்டு.

**கும்பம்:-** சுக, சௌக்கியங்கள் குறையும். வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களால் இழப்பு ஏற்படலாம்.

**மீனம்:-** பணவரவால் மனம் பரவசப்படும். தாய், மனைவி போன்ற பெண்களால் இலாபம் ஏற்படும். இனிய பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். கல்வியில் தடைகள் ஏற்படலாம்.

### காசாவில் இஸ்ரேல் தாக்குதல்;

# பலி 55 ஆயிரத்தை நெருங்குகிறது

**காசா சிட்டி, ஜூன் 05-**

காசாவில் இஸ்ரேல் அதிரடி தாக்குதலில் இதுவரை 55 ஆயிரத்தை பலியாகி உள்ளனர்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 58 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, காசா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், காசா முனையில் இஸ்ரேல் நடத்தி வரும் அதிரடி தாக்குதலில் பலி எண்ணிக்கை 55 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. காசாவில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான்வழி தாக்குதலில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 54 ஆயிரத்து 510 ஆக அதிகரித்துள்ளது.

### கோவில்பட்டி இரட்டை கொலை:

# சிறுவன் உள்பட 14 பேர் கைது

**கோவில்பட்டி, ஜூன் 05-**

கோவில்பட்டியில் நடந்த இரட்டை கொலையில் சிறுவன் உட்பட 14 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கோவில்பட்டி வள்ளுவர் நகர் 1-வது தெருவைச் சேர்ந்த ஆனந்த் மகன் பிரகதீஸ்வரன் (20). இவர் கடந்த 1-ம் தேதி இரவு கடலையூர் சாலையில் நின்றிருந்தார். அப்போது கோவில்பட்டி புதுக்கிராமம் செண்பகா நகர் 3-வது தெருவைச் சேர்ந்த பாஸ்கரன் மகன் சதீஷ் மாதவன் (26) அவரது நண்பர்கள் சேர்ந்து, பிரகதீஸ்வரனிடம் தகராறு செய்து அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் அவரை தாக்கினர். இதில் பிரகதீஸ்வரன் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நடந்த அரை மணி நேரத்துக்குள் சதீஷ் மாதவன் வீட்டுக்கு சென்ற ஒரு கும்பல், அவரது தாய் கஸ்தூரியை (46) கத்தியால் குத்தி கொலை செய்தனர். கஸ்தூரியின் சகோதரர் செண்பகராஜ் (44) என்பவரும் தாக்கப்பட்டார். கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தினர். பிரகதீஸ்வரனை கொலை செய்த வழக்கில் சதீஷ் மாதவன் (26), சிந்தாமணி நகரைச் சேர்ந்த செல்லத்துரை (26), வ.உ.சி. நகரைச் சேர்ந்த விக்னேஷ் (24), புதுக்கிராமம் முகமது சாலிஹாபுரத்தைச் சேர்ந்த மதன் குமார் (20), வடக்கு திட்டங்குளத்தைச் சேர்ந்த கனக ராஜ் (24), செண்பக வல்லி நகரைச் சேர்ந்த அர்ஜுன் (24), சிந்தாமணி நகரைச் சேர்ந்த சுரேஷ் (24) மற்றும் புதுக்கிராமத்தைச் சேர்ந்த 18 வயது சிறுவன் என 8 பேரை கைது செய்தனர்.

மேலும், கஸ்தூரி கொலை வழக்கு தொடர்பாக கோவில்பட்டி மறவர் காலனியைச் சேர்ந்த கோகுலகிருஷ்ணன் (20), வள்ளுவர் நகரைச் சேர்ந்த சரவணன் (20), நாகராஜன் (20), சண்முக நகரைச் சேர்ந்த பாலமுருகன் (19), முகமது சாலிஹாபுரத்தைச் சேர்ந்த மாரிமுத்து மகன் பாலமுருகன் (21), விருதுநகர் மாவட்டம் சாத்தூர் படர்ந்தாளைச் சேர்ந்த தங்கப்பாண்டி (21) ஆகிய 6 பேரை போலீஸார் கைது செய்தனர்.

# பாகிஸ்தானுக்கு ரூ,6,700 கோடி கடன்: ஆசிய வளர்ச்சி வங்கி முடிவுக்கு இந்தியா கடும் கண்டனம்

**புதுடில்லி, ஜூன் 05-**

பயங்கரவாதத்திற்கு பாகிஸ்தான் நீண்ட காலமாகவே தொடர்ந்து நிதி உதவி செய்து பயங்கரவாதத்தை வளர்த்து வருகிறது. பாகிஸ்தானின் இந்த செயலுக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை வளர்க்கும் பாகிஸ்தானுக்கு கண்டனங்கள் வலுத்து வருகிறது.

இந்நிலையில் ஆசிய வளர்ச்சி வங்கி, பாகிஸ்தானை மேம்படுத்துவதற்கு ரூ.6,700 கோடி கடன் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த மாதம் தான் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக, ஐ.எம்.எப்., எனப்படும் சர்வதேச நிதியத்திடம் பாகிஸ்தான் கோரி இருந்தது. அதற்கு இந்தியா கடும் எதிர்ப்பை பதிவு செய்தது. அதை தொடர்ந்து ரூ.8,500 கோடி கடன் உதவி அளிக்க ஐ.எம்.எப்., ஒப்புதல் அளித்தது. இதற்கு இந்திய தரப்பில் கடும் கண்டனங்களை பதிவு செய்தது. அதனை தொடர்ந்து தற்போது ஆசிய வளர்ச்சி வங்கி, ரூ.6,700 கோடி கடன் நிதி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்த நிலையில், பாகிஸ்தானில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச நிதியத்திடம் அந்நாடு கோரிக்கை விடுத்தது. இதற்கு இந்தியா கடும் ஆட்சேபத்தை பதிவு செய்தது. இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் டாலர், அதாவது இந்திய மதிப்பில் 8,500 கோடி ரூபாய் கடன் உதவி அளிக்க சர்வதேச நிதியம் ஒப்புதல் அளித்தது.

இவ்வாறு வாங்கும் கடன் நிதிகள் அனைத்தும் பயங்கரவாதத்திற்கு தான் பாகிஸ்தான் பயன்படுத்தும். முக்கிய பொருளாதார சீர்திருத்தங்களைச் செயல்படுத்த பாகிஸ்தான் பலமுறை தவறிவிட்டது என்ற அடிப்படையில், இதற்கு இந்தியா கடும் கண்டனங்களை பதிவு செய்துள்ளது.

### பயங்கரவாதத்தை எதிர்த்து போராட

# இந்தியாவுடன் பேச தயார்: பிலாவல் பூட்டோ

**நியூயார்க், ஜூன் 05-**

பயங்கரவாதத்தை எதிர்த்து போராட இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று முன்னாள் அமைச்சர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து இந்திய தரப்பின் நியாயத்தை எடுத்துரைக்க காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் தலைமையிலான இந்திய அனைத்துக் கட்சிக் குழு வாஷிங்டனுக்கு வந்துள்ள நாளில், பிலாவல் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் குழுவும் தங்கள் தரப்பின் கருத்தை எடுத்துரைக்க நியூயார்க் வந்துள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவு அமைச்சரான பிலாவல் பூட்டோ, நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடந்த ஒரு மாநாட்டில் ஆற்றிய உரையில், "பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பாகிஸ்தான் இன்னும் இந்தியாவுடன் ஒத்துழைக்க விரும்புகிறது. அதுதான் அமைதிக்கான ஒரே சாத்தியமான பாதை. மக்களின் தலைவிதியை அரசு சாராதவர்கள் மற்றும் பயங்கரவாதிகளின் கைகளில் விட்டுவிட முடியாது. இரண்டு அணு ஆயுத நாடுகளுக்கு இடையே தகராறை தீர்க்கும் வழிமுறைகள் இல்லாமல் இருக்க முடியாது.

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ மற்றும் இந்திய உளவு அமைப்பான ரா ஆகியவை அமர்ந்து பேசி பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடத் தயாராக இருந்தால், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பயங்கரவாதம் கணிசமாகக் குறைவதைக் காண்போம் என்று நான் முழுமையாக நம்புகிறேன் என்று அவர் கூறினார்.

# இந்தியாவின் தேசிய மொழி குறித்து கனிமொழி கருத்து

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



**சென்னை, ஜூன் 05-**
ஸ்பெயின் மண்ணில் வேற்றுமையில் ஒற்றுமையே இந்தியாவின் தேசிய மொழி என்று கூறிய தங்கை கனிமொழியை கண்டு பெருமை கொள்வாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, இந்தியா, பாகிஸ்தான் இடையிலான மோதல் குறித்து சர்வதேச நாடுகளுக்குத் தெளிவாக விளக்குவதற்காக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் உள்ளடக்கிய 7 குழுக்கள் உருவாக்கப்பட்டன. அந்த குழுக்கள் பல்வேறு நாடுகளுக்கும் பயணித்து ஆபரேஷன் சிந்தூர் குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்து வருகின்றன.

அதில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி தலைமையில் ஒரு எம்.பி.க்கள் குழு இடம்பெற்றுள்ளது. இந்த குழு ஸ்பெயினுக்கு சென்று அந்நாட்டு அதிகாரிகளை சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தது.

அதன்பின்னர், அந்நாட்டில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் தி.மு.க. எம்.பி. கனிமொழி பங்கேற்றார். அப்போது, இந்தியாவின் தேசிய மொழி குறித்து செய்தியாளர் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த கனிமொழி, வேற்றுமையில் ஒற்றுமையே இந்தியாவின் தேசிய மொழி' என கூறினார். அவரது பேச்சை செய்தியாளர்கள் கைதட்டி வரவேற்றனர்.

இந்நிலையில், தங்கை கனிமொழியை கண்டு பெருமை கொள்கிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கனிமொழி பேசிய வீடியோவை பகிர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ஸ்பெயின் மண்ணில், இந்தியாவின் தேசிய மொழி வேற்றுமையில் ஒற்றுமை என உரக்கச்சொல்லி, மக்களின் உணர்வுகளைக் கைத்தட்டல்களாகவும் - உங்களால் அதிகம் பகிரப்படும் காணொளியாகவும் மாற்றிய தங்கை கனிமொழியை வாழ்த்தினேன். இந்திய நாட்டுக்கான குரலாகத் தமிழ்நாட்டின் அன்புமொழியை - ஒற்றுமைமொழியைப் பேசிய தங்கை கனிமொழியை கண்டு பெருமை கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# ஓய்வுக்குப் பிறகு அரசாங்க பதவியை ஏற்க மாட்டேன்

## தலைமை நீதிபதி கவாய் உறுதி

**புதுடெல்லி, ஜூன் 05-**
நீதித்துறையில் நிகழும் ஊழல் மற்றும் தவறான நடத்தைகள், நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவதாக சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கவலை தெரிவித்துள்ளார். மேலும் ஓய்வுக்குப் பின் அரசாங்கத்தின் எந்த பதவிகளையும் ஏற்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



நீதித்துறைக்கு இருக்கும் சட்ட அதிகாரம் மற்றும் பொது நம்பிக்கையைப் பேணுதல் என்ற தலைப்பில் சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் உரை நிகழ்த்திய பி.ஆர்.கவாய், "நீதித்துறையில் நிகழும் ஊழல் மற்றும் தவறான நடத்தைகள், நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால், ஒட்டுமொத்த அமைப்பின் நேர்மையின் மீதான நம்பிக்கையை அரிக்கும் சாத்தியக்கூறு இருக்கிறது.

ஒவ்வொரு அமைப்பும், எவ்வளவு வலுவானதாக இருந்தாலும், தொழில்முறை முறைகேடு தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆளாகிறது. துரதிர்ஷ்டவசமாக, நீதித்துறைக்குள்ளும் கூட ஊழல் மற்றும் முறைகேடு சம்பவங்கள் நடந்துள்ளன. இத்தகைய நிகழ்வுகள் தவிர்க்க முடியாமல் பொதுமக்களின் நம்பிக்கையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒட்டுமொத்த அமைப்பின் நேர்மையின் மீதான நம்பிக்கையை இது சிதைக்கக்கூடும்.

இருப்பினும், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எடுக்கப்படும் தீர்க்கமான, விரைவான, வெளிப்படையான நடவடிக்கைளின் மூலம் நம்பிக்கையை நாம் மீண்டும் கட்டியெழுப்ப முடியும். இதுபோன்ற சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வரும் போது, சுப்ரீம் கோர்ட் தவறான நடத்தையை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகளை தொ டர்ந்து எடுத்து வருகிறது. ஒரு நீதிபதி, தேர்தலில் போட்டியிடுவது நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் பாரபட்சமற்ற தன்மை குறித்த சந்தேகங்களுக்கு வழி வகுக்கும். எனவே, நானும் எனது சக ஊழியர்களில் பலரும் ஓய்வுக்குப் பின் அரசாங்கத்தின் எந்த பதவிகளையும் ஏற்க மாட்டோம் என்று பகிர ங்கமாக உறுதியளித்துள்ளோம். இந்த உறுதிப்பாடு நீதித்துறையின் நம்பகத்தன்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கான ஒரு முயற்சியாகும் என்று தெரிவித்தார்.

## த.வெ.க. சார்பில் 2-ம் கட்டமாக

# 10, 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு விருது வழங்கி கவுரவித்தார் விஜய்



**சென்னை, ஜூன் 05-**
10, 12ம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை நேரில் அழைத்து, த.வெ.க., தலைவர் விஜய் விருது வழங்கி கவுரவித்தார்.

10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, த.வெ.க., சார்பில் விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சட்டசபை தொகுதிவாரியாக மாணவர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு விருது மற்றும் விருந்தளித்து, விஜய் வாழ்த்தி வருகிறார்.

முதற்கட்டமாக, 80 தொகுதிகளுக்கான மாணவர்களுக்கு, மே 30ம் தேதி, மாமல்லபுரத்தில் உள்ள தனியார் விடுதியில் விருது வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இரண்டாம் கட்டமாக நேற்று (ஜூன் 04) ராமநாதபுரம், ஈரோடு, கரூர், தஞ்சாவூர், தர்மபுரி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பத்துார், திருப்பூர், திருவாரூர், தென்காசி, மயிலாடுதுறை, விருதுநகர், விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு விருது வழங்கி கவுரவித்தார்.

## சிறுவன் கோரிக்கை நிறைவேற்றம்:

# கேரள அரசு அங்கன்வாடிகளில் இனி முட்டை பிரியாணி வழங்க ஏற்பாடு

**திருவனந்தபுரம், ஜூன் 05-**
கேரளாவை சேர்ந்த சிறுவன் அங்கன்வாடியில் வழங்கப்படும் உப்புமாவுக்கு பதிலாக பிரியாணி வழங்க வேண்டுமென வீடியோ மூலம் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த கேரள அரசு இனி அங்கன்வாடிகளில் முட்டை பிரியாணி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

'பிரியாணி தரணும்' ... கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இணையத்தில் ஒரு வீடியோ வைரலானது. அந்த வீடியோவில் மழலை மொழியில் சிறுவன் ஒருவன், 'பிரியாணி தரணும்' எனச் சொல்வார். அதற்கு அவரது அம்மா, 'எங்கே' எனக் கேட்பர். "அங்கன்வாடியில் உப்புமாவுக்கு பதிலாக பிரியாணியும் பொரிச்ச கோழியும் தரணும்" என சிறுவன் பதில் தந்திருப்பார். அதை வீடியோவாக பதிவு செய்த அவரது அம்மா சமூக வலைதளத்தில் பதிவிட, அது பலரது கவனத்தைப் பெற்றது. வைரல் வீடியோ அரசாங்கத்தின் பார்வை வரைச் சென்றது.

"அங்கன்வாடியில் வழங்கப்படும் உணவு குறித்து சிறுவன் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறோம். உணவை மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்படும்" என கேரள மாநில அமைச்சர் வீணா ஜார்ஜ் அப்போது தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமையன்று அங்கன்வாடி பள்ளிகளின் புதிய கல்வி ஆண்டு தொடக்க விழா பத்தனம்திட்டா மாவட்டத்தில் நடந்தது. அதில் அமைச்சர் வீணா ஜார்ஜ் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் நடப்பு கல்வி ஆண்டுக்கான அங்கன்வாடி பள்ளிகளின் உணவு அட்டவணையில் முட்டை பிரியாணியும், புலாவும் இடம்பெறும் என்றார்.

இது குறித்து மேலும் விவரித்துப் பேசிய அவர், அங்கன்வாடிகளில் ஒருங்கிணைந்த உணவு மெனுவை அமல்படுத்துவது இதுவே முதன்முறை. இந்த உணவு அட்டவணையை பலகட்ட ஆலோசனைகளுக்குப் பின் அமல்படுத்துகிறோம். இதில் முட்டை பிரியாணி, புலாவ் சேர்க்கப்பட்டுள்ளது. குழந்தைகள் உணவில் அதிகளவு உப்பு, சர்க்கரை எடுத்துக் கொள்வதைத் தவிர்க்கும் வகையில் இந்த உணவு மெனு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுவரை வாரத்துக்கு இரண்டு முறை வழங்கப்பட்ட முட்டை, பால் இனி வாரத்துக்கு மூன்று முறை வழங்கப்படும் என்றார்.

# 'தக் லைஃப்' சிறப்பு காட்சிக்கு அனுமதி

**சென்னை, ஜூன் 05-**
கமல்ஹாசன் நடித்துள்ள 'தக் லைஃப்' திரைப்படத்துக்கான சிறப்புக் காட்சிக்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன், சிலம்பரசன் மற்றும் த்ரிஷா நடித்துள்ள 'தக் லைஃப்' திரைப்படம் நாளை வெளியாகவுள்ளது. இந்தப் படத்தின் சிறப்புக் காட்சிக்கு தமிழக அரசு அனுமதியளித்துள்ளது. இதன்படி இன்று ஒருநாள் மட்டும் தமிழகத்தில் சிறப்புக் காட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 'தக் லைஃப்' திரைப்படத்தை இன்று காலை 9 மணிக்கு தொடங்கி இரவு 2 மணிக்குள் முடிக்க வேண்டும் எனவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. சிறப்புக் காட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், 'தக் லைஃப்' திரைப்படத்தை இன்று மொத்தம் 5 காட்சிகள் திரையிடலாம். தமிழக அரசின் இந்த அறிவிப்பால் கமல் மற்றும் சிலம்பரசன் ரசிகர்கள் பெரும் உற்சாகமடைந்துள்ளனர்.

## பாகிஸ்தானுக்கு உளவுபார்த்ததாக

# பஞ்சாப் யூடியூபர் கைது

**சண்டீகர், ஜூன் 05-**
பாகிஸ்தான் உளவு அமைப்புகளுடன் தொடர்பில் இருந்ததாக பஞ்சாப் மாநிலத்தில் ஜஸ்பிர் சிங் என்ற யூடியூர் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் தெரிவித்தனர். இவர், 1.1 மில்லியன் சந்தாதாரர்களுடன் 'ஜான் மஹால்' என்ற யூடியூப் சேனலை, நடத்தி வந்தார்.

ரூப்நகர் மாவட்டத்தில் மஹ்லான் கிராமத்தில் வசித்து வரும் ஜஸ்பிர் சிங், மொஹாலியை அடிப்படையாகக் கொண்ட மாநில சிறப்பு நடவடிக்கை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹரியானாவைச் சேர்ந்த ஜோதி மல்ஹோத்ராவுக்கு பிறகு சமீப வாரத்தில் கைது செய்யப்பட்ட இரண்டாவது சமூக ஊடக படைப்பாளி ஜஸ்பிர் சிங் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஜோதியுடன் தொடர்பில் இருந்திருக்கிறார்.

பஞ்சாப் போலீஸாரின் கூற்றுப்படி, ஜஸ்பிர் சிங் பாகிஸ்தான் உளவுப்பிரிவு அதிகாரியான ஷாகிஸ் என்கிற ஜூத் ரன்தாவாவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார். மேலும் ஜஸ்பிர், பாகிஸ்தானைச் சேர்ந்தவரும், டெல்லியில் உள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனின் முன்னாள் அதிகாரியான ஈஷான் உர் ரஹிம் என்கிற டேனிஷ் என்பவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார். ஈஷான் உளவு பார்த்த குற்றச்சாட்டில் நாடு கடத்தப்பட்டார்.



டேனிஷின் அழைப்பின் பேரில், டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் நடந்த பாகிஸ்தான் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் ஜஸ்பிர் கலந்து கொண்டுள்ளார். அங்கு அவர் பாகிஸ்தான் ராணுவ வீரர்களுடன் உரையாடியுள்ளார். மேலும் ஜஸ்பிர், 2020, 2021 மற்றும் 2024 என மூன்று முறை பாகிஸ்தான் சென்று வந்துள்ளார்.

ஜஸ்பிர் சிங்-ன் மின்னணு சாதனங்களை தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்திய போது பல்வேறு பாகிஸ்தானை சேர்ந்த தொடர்பு எண்கள் அழிக்கப்பட்டது தெரியவந்துள்ளது. ஜோதி மல்ஹோத்ராவின் கைதுக்கு பின்பு, ஐஎஸ்ஐ- உடன் தொடர்புடை பதிவுகளை ஜஸ்பிர் அழிக்க முயன்றது தெரியவந்துள்ளது. பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததற்கான குற்றச்சாட்டில் இது வரை 7 பேரை பஞ்சாப் போலீஸார் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆபரேஷன் சிந்தூரில்

# 9 பாகிஸ்தான் போர் விமானங்கள் அழிப்பு

**புதுடில்லி, ஜூன் 05-**
இந்தியாவின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையில் பாகிஸ்தானின் 9 போர் விமானங்கள் அழிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

' ஆபரேஷன் சிந்தூர் ' நடவடிக்கை மூலம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பாக பல்வேறு புகைப்படங்கள் வெளியாகி வருகின்றன. இந்நிலையில், இந்தியாவின் தாக்குதலில் பாகிஸ்தான் விமானப்படையின் 6 போர் விமானங்கள், 2 கண்காணிப்பு போர் விமானங்கள், சி130 ஹெர்குலஸ் விமானம் மற்றும் 10 ஆயுதம் தாங்கிய ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது தெரியவந்துள்ளது.

இந்தியாவின் தாக்குதல் காரணமாக பாகிஸ்தானின் வான் வெளி மற்றும் தரைவழி ராணுவ சொத்துகளுக்கு அதிக இழப்பு ஏற்பட்டு உள்ளது. வான்வெளி நடவடிக்கையின் போதே இந்த 6 போர் விமானங்களும் அழிக்கப்பட்டு உள்ளன. இந்தியா மீது தாக்குதல் நடத்த வந்த பாகிஸ்தான் போர் விமானங்கள், அந்நாட்டின் பஞ்சாப் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் அழிக்கப்பட்டு உள்ளன. இவை அனைத்தும் இந்திய தரைவழி ஏவுகணை அமைப்புகள் மற்றும் வான்வெளி முன்னெச்சரிக்கை கருவிகளால் எடுக்கப்பட்ட ரேடார் கண்காணிப்பு மூலம் உறுதி செய்யப்பட்டு உள்ளது.

# இந்தியாவை மிரட்டிய ஜெய்ஷ் தீவிரவாதி பாக்.கில் மர்ம மரணம்

**புதுடெல்லி, ஜூன் 05-**
இந்தியாவுக்கு மிரட்டல் விடுத்த ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதி பாகிஸ்தானில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்தியாவை சிறு சிறு பகுதிகளாக உடைத்துவிடுவேன் என ஜெய்ஷ்-இ-முகமது (ஜெஇஎம்) தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த அப்துல் அஜிஸ் கடந்த மாதம் மிரட்டல் விடுத்திருந்தார். இந்த சூழ்நிலையில், பாகிஸ்தானின் பஹவல்பூரில் அப்துல் அஜிஸ் மர்மமான முறையில் இறந்து கிடந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.



ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய சமூக ஊடகங்கள் இதை உறுதிப்படுத்தி இருப்பதுடன், பஹவல்பூரில் அஜிஸ் உடலுக்கு இறுதிச் சடங்கு நடைபெறும் என்று அறிவித்துள்ளன.

ஆனால், பாகிஸ்தான் அதிகாரிகளோ ஜேஇஎம் அமைப்போ இந்த தகவலை இதுவரை உறுதி செய்யவில்லை.

காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருந்த 9 தீவிரவாத முகாம்கள் மீது இந்திய பாதுகாப்புப் படையினர் ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த மே 7-ம் தேதி துல்லிய தாக்குதல் நடத்தினர்.

இதில் பஹவல்பூரில் இருந்த ஜெஇஎம் அமைப்பின் முகாமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## சிக்கிம் நிலச்சரிவால் சிக்கி தவித்த

# 34 சுற்றுலா பயணிகள், ராணுவ வீரர்கள் மீட்பு

**சாட்டன், ஜூன் 05-**
வடக்கு சிக்கிமில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட சாட்டன் பகுதியில் இருந்து நேற்று 27 சுற்றுலாப் பயணிகள் மற்றும் 7 ராணுவ வீரர்களின் குடும்பத்தினர் என மொத்தம் 34 பேர் விமானம் மூலமாக மீட்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

சிக்கிமில் மோசமான வானிலை தொடர்ந்து நிலவும் நிலையில், அவசரகால மீட்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முதல் வெற்றிகரமான வான்வழி வெளியேற்றம் இதுவாகும். சாட்டனில் இருந்து பாக்யோங் கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்திற்கு இரண்டு எம்ஐ-17 வி5 ஹெலிகாப்டர்கள் வெற்றிகரமாக 34 பேரை விமானம் மூலம் மீட்டுச் சென்றன. மீட்கப்பட்டவர்களில் ஏழு ராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் 27 சுற்றுலாப் பயணிகள் அடங்குவர்.

இதில் காயமடைந்தவர்கள் சிலரும் விமானத்தில் இருந்தனர். தற்போது அவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிக்கிம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் டீஸ்டா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஏராளமான கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கனமழை காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. சாட்டனில் உள்ள ராணுவ முகாமில் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு ஏற்பட்ட நிலச்சரிவில் மூன்று ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர், ஆறு வீரர்கள் காணாமல் போயினர்.

காணாமல் போன ஆறு ராணுவ வீரர்களைக் கண்டு பிடிப்பதற்கான தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

செயற்கைக்கோள் தொலைபேசிகள் மற்றும் அத்தியாவசிய நிவாரண உபகரணங்களுடன் 23 தேசிய பேரிடர் மீட்புப் படையினர் சாட்டனில் களமிறங்கியுள்ளனர். நிலச்சரிவால் சாலைகள் கடுமையாக சேதமடைந்ததால், மாற்று போக்குவரத்துப் பாதைகளை தேசிய பேரிடர் மீட்புப் படை கண்டறிய தொடங்கியுள்ளது.

## உத்தரகாண்ட் மாநிலத்தில்

# பா.ஜ.க. நிர்வாகி சுட்டுக்கொலை

**டேராடூன், ஜூன் 05-**
உத்தரகாண்ட் மாநிலத்தில் காரில் சென்ற பா.ஜ.க. நிர்வாகியை மர்ம நபர்கள் சுட்டதில் உயிரிழந்தார்.

உத்தரகாண்ட் மாநிலம் மண்டவ்வாலா மாவட்ட பா.ஜ.க. நிர்வாகி ரோகித் நகி. இவர் அம்மாவட்ட பா.ஜ.க. இளைஞரணி தலைவராக செயல்பட்டு வந்தார். இந்நிலையில், ரோகித் நகி கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு காரில் தனது நண்பர்களுடன் பிடல் சவுக் நகரில் உள்ள சாலையில் சென்றுகொண்டிருந்தார். அப்போது, பைக்கில் வந்த 2 பேர் திடீரென ரோகித் நகியின் காரை இடைமறித்தனர். பைக்கில் பின்னால் அமர்ந்திருந்த நபர் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை கொண்டு காரில் இருந்த ரோகித் நோக்கி சரமாரியாக சுட்டார். பின்னர், உடனடியாக பைக்கில் 2 பேரும் தப்பிச்சென்றனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த ரோகித்தின் நண்பர் அவரை காரிலேயே அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு ரோகித்தை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், ரோகித் மீது துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்ற உத்தரபிரதேசத்தை சேர்ந்த அசார் தியாகி என்ற நபரை தேடி வருகின்றனர். பெண் விவகாரத்தில் பா.ஜ.க. இளைஞரணி தலைவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பாக். தீவிரவாதிகளுக்கு உதவி: காஷ்மீரில் 3 ஊழியர்கள் நீக்கம்

**ஸ்ரீநகர், ஜூன் 05-**
காஷ்மீரில் தீவிரவாத அமைப்புக்களுக்கு உதவியதாக காவலர் உட்பட 3 அரசு ஊழியர்களை துணைநிலை ஆளுநர் பணி நீக்கம் செய்தார்.

காஷ்மீர் துணைநிலை ஆளுநராக கடந்த 2020-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொறுப்பேற்ற மனோஜ் சின்ஹா, தீவிரவாதத்துக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். குறிப்பாக தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்த 75-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களை அரசியல் சாசனத்தின் 311 (2) (சி)-வது பிரிவின் கீழ் பணி நீக்கம் செய்துள்ளார்.

அந்த வகையில், காவலர் மாலிக் இஷ்பக் நசீர், பள்ளி ஆசிரியர் அஜாஸ் அகமது மற்றும் ஸ்ரீநகர் அரசு மருத்துவக் கல்லூரியின் இளநிலை பொறியாளர் வாசீம் அகமது கான் ஆகிய 3 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா மற்றும் ஹிஸ்புல்-முஜாஹிதீன் ஆகிய தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக புகார் எழுந்த நிலையில், மனோஜ் சின்ஹா அவர்களை பணி நீக்கம் செய்துள்ளார்.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ம் தேதி தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில் உள்ளூரைச் சேர்ந்த ஒருவர் மற்றும் 25 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இந்நிலையில் 3 அரசு ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



கமல்ஹாசன் மீது நாங்கள் மென்மையான போக்கை காட்டவில்லை. மொழி, சாதி, மாநிலங்களுக்கு இடையே சண்டையை ஏற்படுத்த முடியுமா?. பா.ஜனதாவினர் எப்போதும் பிரிவினையை ஏற்படுத்துகிறார்கள். நாங்கள் ஒன்றுபடுத்துபவர்கள். அவர்கள் கத்திரிக்கோல், நாங்கள் ஊசி. ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் யார் பொறுப்பு?.

- டி.கே.சிவக்குமார்



தமிழ்நாட்டின் அரசு பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டம் பெற்றுள்ளவர்கள், 'அதற்கேற்ற கல்வியறிவும், திறமையும் இல்லை" என கவர்னர் பேசியிருப்பது மாணவர்கள், கல்வியாளர்களுக்கு விடுக்கப்படும் நேரடியான அவமதிப்பு. கவர்னர் இந்த அவமதிப்பான கருத்தை வாபஸ் பெற்று, தமிழக மக்களிடம மன்னிப்புக் கேட்கவேண்டும்.

- செல்வப்பெருந்தகை



போட்டித்தேர்வுகளையும், நுழைவுத்தேர்வுகளையும் எதிர்கொள்ள ஏராளமான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வரும் நிலையில், அரசு, தனியார் பள்ளிகளின் மாணவ, மாணவியருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுத்து, மாநில பாடத்திட்டத்தை மத்திய பாடத்திட்டத்திற்கு இணையாக வலுப்படுத்த வேண்டும்.

- அன்புமணி



தி.மு.க. கூட்டணிக்கு மேலும் சில கட்சிகளுக்கு செல்வப்பெருந்தகை அழைத்து விடுத்துள்ளார். இது குறித்து அந்தந்த கட்சிகள்தான் முடிவு எடுக்க வேண்டும். இதுவரை தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி என்பது இல்லை. வரக்கூடிய காலங்களில் அது சாத்தியமா என்று பார்க்கலாம். ஆனால் 2026 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்.

- நயினார் நாகேந்திரன்

தென்காசி மாவட்டத்தில்

# பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் ஆய்வு



**தென்காசி ஜூன்.05:** தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்டஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தென் மாவட்டத்திற்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். பொதுமக்களுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க அறிவுறுத்தி உள்ளார். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம்கடையநல்லூர் வட்டம் மேலக் கடையநல்லூர் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துகளின் இருப்பு மற்றும் தரம், அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும்,கிருஷ்ணாபுரம் கிராமம் சுலைமான் நகர் பளியர் குடியிருப்பு பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளையும், பழங்குடியினர் நலத்துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், கடையநல்லூர் வட்டம் பேருந்து நிலைய பகுதியில் கட்டப்பட்டு வரும் கட்டிட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அனைத்து பணிகளையும் விரைந்து முடித்துபொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், இந்த ஆய்வின் போது, துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

கோவில்பட்டி அரசு மருத்துவமனையில்

# கருணாநிதி பிறந்த நாளன்று பிறந்த 14 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்: அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்

**கோவில்பட்டி ஜூன் 05** கோவில்பட்டி தலைமை மாவட்ட அரசு மருத்துவமனையில் நேற்று பிறந்த14 குழந்தைகளுக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த நாளை முன்னிட்டு அமைச்சர் கீதா ஜீவன் தங்க மோதிரம் வழங்கினார் தொடர்ந்து குழந்தைகள் நல பரிசு பெட்டகம் மற்றும் ஊட்டச்சத்துக்கள் வழங்கப்பட்டது நிகழ்ச்சிக்கு கோவில்பட்டி நகராட்சி சேர்மன் நகர செயலாளர் கருணாநிதி தலைமை வைத்தார். ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராதாகிருஷ்ணன் மாநில பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ் நகர் மன்ற உறுப்பினர்கள் பொறியாளர் தவமணி, ராமர், ஏஞ்சலா சின்னத்துரை, அமலி. ஜேஸ்மின் லூர்து மேரி அந்தோணி பிரகாஷ், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் இந்துமதி கௌதம், நகர பொருளாளர் ராமமூர்த்தி அரசு வழக்கறிஞர்



ராமச்சந்திரன் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் பாரதி, மகளிர் அணி வழக்கறிஞர் சாந்தி, வார்டு செயலாளர்கள் பூல் பாண்டி, முத்து பாண்டியன், ராஜதுரை, தாமோதரன், உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்.



**கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலக குறள் கூட்டரங்கில் இந்திய கடல்சார் வல்லுனர்களுடன் அரபிக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.**

தென்காசி மாவட்டத்தில்

# புதிய தேமுதிக நிர்வாகிகள் நியமனம்



**தென்காசி ஜூன்.05-** தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சரவணன், தென்காசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சுரண்டை சங்கரலிங்கம், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் முக்கூடல் மாதவன் பிரின்ஸ் ஆகியோர் தேமுதிக புதிய நிர்வாகிகளாக பொறுப்பேற்றனர். புதிய நிர்வாகிகள் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்திற்கு நன்றி தெரிவித்தனர். உடன் மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் சந்துரு சுப்பிரமணியம், மாவட்ட மகளிர் அணி செயலாளர் மயில் அம்மாள், மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர் சேர்மன், கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் உதயகுமார், கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் சுப்பையா சரவணன், திருமலை செல்வம், ஆழ்வார்குறிச்சி பேரூர் கழகம் சண்முகம் சேட், ஆய்க்குடி பேரூர் கழகம் முருகன், சாம்பவர்வடகரை ஆறுமுகம், சுரண்டை நகராட்சி ஜான்சன், சுரண்டை ராமச்சந்திரன், பாப்பாக்குடி ஒன்றியவை தலைவர் நெல்லை குமார், மாவட்ட இளைஞர் அணி துணை செயலாளர் தம்பி, வீராணம் கலை, ஆலங் குளம் அய்யாதுரை மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

சங்கரன்கோவிலில்

# கருணாநிதி பிறந்த நாள் விழா: ராஜா எம்எல்ஏ, ராணி ஸ்ரீகுமார் எம்.பி.பங்கேற்பு



**சங்கரன்கோவில். ஜூன்.05-** முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா சங்கரன்கோவில் நகர கழகம் சார்பில் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நகர அவை தலைவர் முப்பிடாதி தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,பரம குரு, மாவட்ட அவை தலைவர் சுப்பையா, மாவட்ட துணை செயலாளர் புனிதா, ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், பெரியதுரை முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் பிரகாஷ் வரவேற்றார்.

இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, எம்பி ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் கலந்துகொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதில் நகரக் கழக துணை செயலாளர்கள் முத்துக்குமார், சுப்புத்தாய், மாவட்ட பிரதிநிதி செய்யதுஅலி, அணி அமைப்பாளர்கள்

நெசவாளர் அணி சந்திரன், மாணவர் அணி உதயகுமார், தொண்டரணி அப்பாஸ், தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், தொமுச சங்கரன்கோவில் கிளைச் செயலாளர் சங்கர்ராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜ், அன்சாரி, கார்த்திக், வார்டுசெயலாளர்கள் தங்கவேலு, வாழைக்காய் துரைபாண்டியன், காளிசாமிபாண்டியன், மாரியப்பன், கணேசன், வைரவேல், சுப்பிரமணியன், நடராஜன், செந்தில்குமார்,சுப்பிரமணியன், ஆறுமுகம், மணிகண்டன், மகாமாரியம்மன், வீராச்சாமி முத்து , முத்துக்குமார், கோமதிநாயகம், இளங்கோ மாரியப்பன், தீப்பொறி ஆறுமுகம் , பழனிச்சாமி,ராமலிங்கம் நகர நெசவாளர் அணி ராஜ், நகர ஓட்டுனர் அணி,முகைதீன் பட்டாணி , நகர இளைஞரணி ஜான்பீட்டர், நகர தொழிலாளர் அணி மாதேஷ், பாக முகவர்கள் சபாபதி, வேல்ராஜன், ஆனந்தகுமார், வைரமுத்து, வார்டு பிரதிநிதிதினேஷ் பாபு, ராஜா, சாகுல் ஹமீது, ஜெயக்குமார், பாலாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் உண்டியல் எண்ணும் பணி

## 1 கிலோ தங்கம்-22 கிலோ வெள்ளி காணிக்கை



**திருச்செந்தூர்.ஜூன்.05-** திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் உண்டியல் மூலம் ரூ.3.42 கோடி வருவாய் கிடைத்துள்ளது. மேலும், ஒரு கிலோ தங்கம், 22 கிலோ வெள்ளி பொருட்களும் இருந்தன.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் உண்டியல் எண்ணிக்கை வசந்த மண்டபத்தில் வைத்து நடந்தது. கோவில் தக்கார் அருள்முருகன் தலைமையில், இணை ஆணையர் ஞானசேகரன் முன்னிலையில் உண்டியல் எண்ணும் பணி நடந்தது.

இதில், இந்து சமய அறநிலையத்துறை முதுநிலை கணக்கு அலுவலர் ராஜாராமன், உதவி ஆணையர்கள் ஆறுமுகம், நாகவேல், கண்காணிப்பாளர் ரோகிணி, ஆய்வர் செந்தில்நாயகி, தக்காரின் நேர்முக உதவியாளர் செந்தமிழ்பாண்டியன், பொதுமக்கள் பிரதிநிதிகள் வேலாண்டி, மோகன், சிவகாசி பதினெண் சித்தர் மடம் குருகுல வேத பாடசாலை உழவாரப் பணி குழுவினர் மற்றும் கோவில் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

உண்டியல் எண்ணிக்கையில் 3 கோடியே 42 லட்சத்து 28 ஆயிரத்து 824 ரூபாய் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர். மேலும் தங்கம் 1 கிலோ 701 கிராம், வெள்ளி 22 கிலோ 791 கிராம், வெளிநாட்டு கரன்சிகள் 1237, வெள்ளி பொருட்கள், வெள்ளி சுவாமி முகம் மற்றும் கேரளா மாநில லாட்டரி சீட்டும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

தென்காசி மாவட்டத்தில்

# வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம்



**தென்காசி ஜூன்.05:** இந்திய அரசின் வேளாண் அமைச்சகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் வழிகாட்டுதலின் படி விவசாய விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் விஞ்ஞானிகளையும் விவசாயிகளையும் இணைக்கும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் மே 29 முதல் ஜூன் 12 வரை 15 நாட்களுக்கு தென்காசி மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ளது. கடையநல்லூர் வேளாண் அறிவியல் மையம் மூலம் இப்பிரச்சாரம் ஜூன் மாதம் 4 ம் தேதி மேலப்பாவூர், வெள்ளக்கால், இனாம் வெள்ளக்கால், துவரங்காடு மற்றும் இடையர்தவணை கிராமங்களில் நடைபெற்றது. இதில் காரீப் பருவ பயிர்களுக்கான புதிய இரகங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் திட்டங்களை விவசாயிகளுக்கு கொண்டுசேர்ப்பது இப்பிரச்சாரத்தின் முக்கிய நோக்கமாகும். வேளாண் விஞ்ஞானிகள், வேளாண்மை துறை, கால்நடை துறை மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகள் இணைந்து விவசாயிகளுக்கு பயிர் மேலாண்மை, நவீன விவசாய தொழில்நுட்பங்கள், இயற்கை வேளாண்மை, கால்நடை மேம்பாடு, வேளாண்மை மற்றும் அதை சார்ந்த துறையிகளில் உள்ள திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு ஆதரவுடன், வெள்ளக்கால் கிராமத்தில் ட்ரோன் மூலம் நானோ தெளிப்பு குறித்த செயல்விளக்கம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மேலப்பாவூர், வெள்ளக்கால், இனாம் வெள்ளக்கால், துவரங்காடு மற்றும் இடையர்தவணை கிராமங்களின் பஞ்சாயத்து தலைவர்கள் கலந்து கொண்டனர். இதில் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

# கொண்டலூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிட திறப்பு விழா



**தென்காசி ஜூன்.05:** தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் கொண்டலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் குழந்தை நேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2024- 2025 இன் கீழ் ரூபாய் 17.30 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு வகுப்பறைக் கட்டடம் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு ஆவுடையானூர் ஊராட்சி மன்றத் தலைவர் (பொறுப்பு) மகேஸ்வரி தலைமை வகித்தார்.பள்ளியின் தலைமை ஆசிரியர் மைக்கேல்ராஜ் வரவேற்றுப் பேசினார். ஒன்றியக் குழு தலைவர் காவேரி சீனித்துரை புதிய வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்தார்.

ஒன்றியக் குழு உறுப்பினர் ராம உதயசூரியன் ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவர் முத்துக்குமார் முன்னிலை வகித்தனர். மாவட்டக் கவுன்சிலர் சுப்பிரமணியன் ,வட்டாரக் கல்வி அலுவலர் மேரி கிரேஸ் ஜெபராணி, வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுனர் வளர்மதி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

திறப்பு விழாவில் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர் ஜெயலட்சுமி பள்ளி மேலாண்மை குழு தலைவர் விஜயா ஆசிரியர்கள் வெனிஷ்டா பொன்சுதா, சகுந்தலா என்ற ராஜகனி, உமா மகேஸ்வரி சத்துணவு அமைப்பாளர் பொன்ஷீலா தன்னார்வலர்கள் அர்ச்சனா ,பிரசன்னா, சுரேஷ் ,ராஜகோபால், ராஜேந்திரன், கலைச்செல்வன், லிங்கராஜா, ராஜகுரு அரசு ஒப்பந்தக்காரர் அருணாச்சலம் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் மீனாட்சி நன்றி கூறினார்.

# உழவரைத் தேடி -வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம்: காணொளியில் முதல்வர் தொடங்கி வைத்தார்



**சங்கரன்கோவில், ஜூன்.5-** மேலநீலிதநல்லூர் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் சின்ன கோவிலாங்குளம் பஞ்சாயத்தில் வேளாண்மை துறை சார்பில் உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டத்தை தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்கள் கிராமங்களுக்கு நேரடியாக சென்று அவர்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ற திட்டங்களை வழங்கிட புதிய தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறும் வகையில் 2025 - 26ம் ஆண்டு வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கையில் உழவர்களை தேடி வேளாண்மை உழவர் நலத் துறை திட்டம் அறிவிக்கப்பட்டு 14 ஆயிரத்து 116 கிராமங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

திட்டத்துக்கான முகாம்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள இரண்டு கிராமங்களில் நடத்தப்படும். மேல நீலித நல்லூர் வட்டாரத்தில் உள்ள 21 வருவாய் கிராமங்களிலும் ஒவ்வொரு மாதமும் நான்கு கிராமங்கள் வீதம் உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத் துறை திட்ட முகாம்கள் நடத்தப்படும்.

மேலநீலிதநல்லூர் வட்டாரத்தில் இந்த நிகழ்ச்சியின் தொடக்க விழா சின்ன கோவிலாங்குளம் கிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தென்காசி வேளாண்மை துணை இயக்குனர் முன்னிலை வகித்தார். மேல நீலிதநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஞானதீபா மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளத்துரை பாண்டியன் தலைமையிலும் நடைபெற்றது. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ள பாண்டியன் கலந்து கொண்டார் .மேலும் உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண்மை), உதவி வேளாண்மை அலுவலர் (வணிகம்), கால்நடை உதவி மருத்துவர்,உதவி தோட்டக்கலை அலுவலர், கூட்டுறவு வங்கி செயலாளர், பெடரல் வங்கி மேலாளர் மற்றும் கள அலுவலர், ஆத்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் தங்கள் துறை சார்ந்த திட்டங்களை எடுத்துக் கூறினர். மேலும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டு திட்டங்கள் சம்பந்தமான கோரிக்கை மனுவை தென்காசி வேளாண்மை துணை இயக்குனர் இயக்குனர் வழங்கினர்.



தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் மருத்துவ சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ எட்டெழுத்து பெருமாள் ஸ்ரீ ஐந்து வீட்டு ஆத்தியப்பன் சுவாமி மற்றும் பரிவார தேவதைகள் கோவில் கும்பாபிஷேக விழா அழைப்பிதழை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே ஜெயபாலனிடம் கோவில் நிர்வாகிகள் வழங்கினர் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் கும்பாபிஷேக விழாவிற்கு நன்கொடை வழங்கினார்

**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை**

# அரபிக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள்: இந்திய கடல்சார் வல்லுநர் குழுவினர்களுடன் கலெக்டர் ஆர்.அழகுமீனா கலந்தாய்வு

கன்னியாகுமரி,ஜூன்.05- கடந்த 25.05.2025 அன்று கண்டெய்னர்கள், பிளாஸ்டிக் துகள்கள், மரக்கட்டைகள், இரும்பு கம்பிகள் உள்ளிட்ட பொருட்களை ஏற்றிச்சென்ற *MSC Elsa 3* கப்பல் கொச்சி துறைமுகத்திலிருந்து சுமார் 35 நாட்டிக்கல் மைல் தூரத்தில் அரபிக்கடலில் மூழ்கியதை தொடர்ந்து கன்னியாகுமரி கடற்கரை பகுதிகளான வள்ளவிளை, நீரோடி, இனயம் புத்தன்துறை, சின்னத்துறை, மிடாலம், கோடிமுனை உள்ளிட்ட சுமார் 36 மீனவ கடலோர பகுதிகளில் இப்பொருட்களில் கரை ஒதுங்கியதையொட்டி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உடனடியாக மீன்வளத்துறை, மாசுகட்டுப்பாட்டு வாரியம், பேரிடர் மேலாண்மை, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்ஒருபகுதியாக கன்னியாகுமரி கலெக்டர் ஆர்.அழகுமீனா, தலைமையில் ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் இந்திய கடல்சார் வல்லுனர்களுடன் அரபிக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து கலந்தாய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில் - 24.05.2025 அன்று காலை *MSC Elsa 3* என்ற சரக்கு கப்பல் கேரள மாநில கொச்சி கடற்கரை பகுதியில் இருந்து 38 நாட்டிக்கல் மைல் தொலைவில் அரபிக்கடல் பகுதியில் மூழ்கியுள்ளது என்றும், கப்பலில் சுமார் 630 கொள்கலன்கள் (Container) கடலில் விழுந்து மிதந்து கொண்டு இருப்பதாகவும் தகவல் பெறப்பட்டது. தற்போது தென்மேற்கு பருவமழை மற்றும் கடல் சீற்றம் அதிகமுள்ள காலநிலையாக இருப்பதனால் கொள்கலன்கள் மற்றும் அவற்றில் உள்ள பொருட்கள் கடல் அலைகளின் உந்து விசையினால் கரை இழுத்து செல்லப்பட்டு கடற்கரை ஓரங்களில் ஒதுங்கி வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீரோடி முதல் ஆரோக்கியபுரம் வரை மொத்தம் 42 கடற்கரை கிராமங்கள் 71.05 கிலோ மீட்டர் நீளத்தில் அமைந்துள்ளன. 27.05.2025 முதல் கிள்ளியூர் வட்டம், மீனவ கிராமம் நீரோடி முதல் கல்குளம் வட்டம் மீனவ கிராமம் கடியபட்டணம் வரை நர்டில்ஸ் (Nurdles) எனப்படும் பிளாஸ்டிக் மணிகள், மரக்கட்டைகள், இரும்பு கம்பிகள், முதிரி பருப்பு மூடைகள் போன்ற பொருட்கள் கடலில் மூழ்கிய சரக்கு கப்பலில் இருந்து தொடர்ந்து மிதந்து வந்த வண்ணம் கரை ஒதுங்கி வந்தது.

இதுதொடர்பாக தகவல் பெறப்பட்டவுடன் 27.05.2025 அன்று கலெக்டர் அவர்களால் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் உடன் கலந்தாய்வு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து தினமும் சம்பந்தப்பட்ட அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட அனைத்து கடற்கரை கிராமங்களிலும் தூய்மை பணி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 29.05.2025 அன்று தலைமை செயலர் சென்னை அவர்களாலும் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு விரிவான அறிவுரைகள் மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கப்பட்டது.

இது தொடர்பாக கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள உரிய வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) பின்பற்றி உடனடியாக மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் மற்றும் உதவி இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, தேங்காய்பட்டணம், வட்டாட்சியர்கள், கிராம நிருவாக அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், இயணைப்புத்துறை அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வை மற்றும் உதவியுடன் மேற்படி கடற்கரையோரம் ஒதுங்கும் பிளாஸ்டிக் மணிகள் மற்றும் இதர பொருட்களை மிகவும் பாதுகாப்புடன் கையுறை மற்றும் முகக்கவசம் அணிந்து பேரிடர் மேலாண்மையில் பயிற்சி பெற்ற ஆப்த மித்ரா தன்னார்வலர்கள் மற்றும் உள்ளாட்சித்துறையில் பணிபுரியும் தூய்மை காவலர்களைக் கொண்டு அகற்றப்பட்டு உள்ளாட்சி அமைப்பினர் மூலம் இதற்கென தேர்வு செய்யப்பட்ட கிட்டங்கியில் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக குஜராத்திலிருந்து வருகை புரிந்த கடலோர காவல் படை அதிகாரிகளை கலெக்டர் அவர்கள் 30.05.2025 அன்று நேரில் சந்தித்து ஆலோசனைகள் மேற்கொண்டார். மேலும், *MSC Marine Engineering Resource Centre (MERC), Porbanthar, Gujarat Agency* - கடற்கரைகளில் அப்புறப்படுத்தும் மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனத்தின் கேத்கன் 9825209099 என்பவர் தலைமையில் குஜராத் மாநிலத்திலிருந்து 3 பணியாளர்கள், ஒரு கமாண்டன்டர் தலைமையிலான 8 காவல் படை அதிகாரிகள் வருகை தந்துள்ளார்கள். வானிலை சூழலுக்கு ஏற்ப கடற்கரையில் நகரும் பிளாஸ்டிக்துகள்கள், பெட்டகங்களின் திசை மற்றும் கரை ஒதுங்கக்கூடிய பகுதிகளை அறிவியல் வல்லுநர்களிடம் கலந்துரையாடி பாதுகாப்பான முறையிலும், அப்புறப்படுத்தும் சூழ்நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டது. பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும், இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24x7 முழுநேர கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டது. கொள்கலன் (Container) மற்றும் இதர பொருட்கள் ஏதேனும் கடற்கரை ஒரங்களில் காணப்பட்டால் உடனடியாக இதற்கென மாவட்ட நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு மைய எண். 1077, மாசு கட்டுப்பாட்டு வாரிய கைப்பேசி எண்.8056005578 மற்றும் தேங்காய்ப்பட்டினம் உதவி இயக்குநர், மீன்வளத்துறை கைப்பேசி எண். 9384824286, குளச்சல் உதவி இயக்குநர், மீன்வளத்துறை கைப்பேசி எண் 9597433412 நாகர்கோவில் உதவி இயக்குநர், மீன்வளத்துறை கைப்பேசி எண்.9003942998 என்ற எண்ணிற்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்படி பொருட்கள் கரை ஒதுங்குவது தொடர்பாக மீனவ பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் எவரும் அச்சம் கொள்ள வேண்டாம் எனவும், பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் இதர பொருட்கள் கரை ஒதுங்கும் கடற்கரைப் பகுதிக்கு செல்ல வேண்டாம் எனவும், பிளாஸ்டிக் மணிகளை கையால் தொடக்கூடாது எனவும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து இன்று இந்திய கடல்சார் வல்லுநர்கள் மற்றும் நார்த்ஸ்டாண்ட் காப்பீடு நிறுவனத்தின் நிர்வாகிகளுடன் *MSC Elsa 3* கப்பல் மூழ்கியதால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து *MSC Elsa 3* கப்பலில் மேற்கொள்ளப்படும் மீட்புப் பணிகள் தொடர்பான தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

கலந்தாய்வில் இந்திய துணை கடல்சார் ஆலோசகர் கேப்டன் அனீஷ் ஜோசப், போஸ் மற்றும் மித்ரா &கோ வழங்கறிஞர்கள் அமிதவா மஜூம்தார், ருசிர் கோயங்கா, மூத்த நிர்வாகி கில்லியன் கிளார்க், தொழில்நுட்ப இயக்குநர் (நார்த்ஸ்டாண்ட்) ரிச்சர்ட் ஜான்சன், இழப்பு தடுப்பு இயக்குநர் (நார்த்ஸ்டாண்ட்) ஜான் சவுதம், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, துணை இயக்குநர் (மீன்வளத்துறை) சின்னகுப்பன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கு சுகிதா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, உதவி இயக்குநர்கள் (மீன்வளத்துறை) தீபா (கன்னியாகுமரி), விர்ஜில் கிராஸ் (குளச்சல்), அஜித் ஸ்டாலின் (தேங்காய்பட்டணம்), செயற்பொறியாளர் (மீன்பிடிதுறைமுகம்) பிரேமா, மாவட்ட மாசுகட்டுப்பாட்டு அலுவலர் பாரதி, பேரிடர் வட்டாட்சியர் சுசீலா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**தவறிவிட்டது**

**13-12-2024 தேதி விக்கிரமசிங்கபுரம் பசுக்கிடைவிளை மழை வெள்ளத்தில் நான்அமலி மகளிர் மேல்நிலை பள்ளியில் பயின்ற எனது கல்வி அசல் மாற்று சான்றிதழ் எண்: 494 இருந்த கைப்பை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.**

**ஜூலியட் கிரேஸ் மேரி**
**52/5 நடுத்தெரு**
**பசுக்கிடைவிளை**
**விக்கிரமசிங்கபுரம்**

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், தென்காசி
RDOTKS/
இ.ப.வ.எண்.106/2025
உச்சிமாகாளி
க/பெ. மருதையா,
126, பிள்ளையார் கோவில் தெரு, இருமன்குளம்,
வடக்குபுதூர்
சங்கரன்கோவில் - 627756
....மனுதார்

அறிவிப்பு

ஷை மனுதார் உச்சிமாகாளி என்பவர் தனது தாயார் மருதாத்தாள் கடந்த 01.07.1979 ம் தேதியன்று க.எண்.77/2, சேர்மன் தெரு, திரிகூடபுரம், சொக்கம்பட்டி கிராமம் என்ற முகவரியில் வைத்து இறந்ததை பதிவு செய்ய தவறிவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினத்திற்குள் தென்காசி கோட்டாட்சித்தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
உச்சிமாகாளி

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
**வேல்சாமி, தபெ. சிவன்,**
**க எண். 2/56A, தெற்குத் தெரு,**
**வடக்கு ஆவரங்காடு,**
**பாஞ்சாலங்குறிச்சி மஜரா,**
**ஓட்டப்பிடாரம் தாலுகா,**
**தூத்துக்குடி மாவட்டம்.**
**மனுதாரர்**
**எதிர்**
**வட்டாட்சியர், ஓட்டப்பிடாரம்.**
**சார் பதிவாளர், ஓட்டப்பிடாரம்.**
**எதிர்மனுதாரர்கள்**

**அறிவிப்பு**

**எனது தகப்பனார் சிவன் தபெ. சிவன் என்பவர் கடந்த 17.03.1997. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**இப்படிக்கு**
**வேல்சாமி,**
**மனுதார்,**

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
**துரைப்பாண்டி, தபெ. சுப்பையா,**
**க எண். 3/189, தெற்குத் தெரு,**
**கல்குமி, பேரிலோவன் பட்டி**
**அஞ்சல், ஆற்றங்கரை,**
**தூத்துக்குடி மாவட்டம்.**
**மனுதாரர்**
**எதிர்**
**வட்டாட்சியர், விளாத்திகுளம்.**
**சார் பதிவாளர், விளாத்திகுளம்.**
**எதிர்மனுதாரர்கள்**

**அறிவிப்பு**

**எனது பாட்டி (எனது தகப்பனாரின் தாயார்) வீரோவம்மாள் என்பவர் கடந்த 14.01.1989. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**இப்படிக்கு**
**துரைப்பாண்டி,**
**மனுதார்,**

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**
**துரைப்பாண்டி, தபெ. சுப்பையா,**
**க எண். 3/189, தெற்குத் தெரு,**
**கல்குமி, பேரிலோவன் பட்டி**
**அஞ்சல், ஆற்றங்கரை,**
**தூத்துக்குடி மாவட்டம்.**
**மனுதாரர்**
**எதிர்**
**வட்டாட்சியர், விளாத்திகுளம்.**
**சார் பதிவாளர், விளாத்திகுளம்.**
**எதிர்மனுதாரர்கள்**

**அறிவிப்பு**

**எனது தாத்தா சண்முக நாயக்கர் (எனது தகப்பனாரின் தகப்பனார்) என்பவர் கடந்த 10.05.1986. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

**இப்படிக்கு**
**துரைப்பாண்டி,**
**மனுதார்,**

## இந்தியாவின் முதல் கிராமப்புற மின் வணிகத் தளம் கொற்றவை - இ-காமர்ஸ் ஸ்டோர் அறிமுகம்



தென்காசி , ஜூன் 5 பீடி சுற்றும் பெண்களை தொழில்முனைவோர் ஆக்கும் முன்னெடுப்பு இந்தியாவின் முதல் கிரமப்புற மின் வணிகத் தளம் "கொற்றவை - இ-காமர்ஸ் ஸ்டோர்" அறிமுகம் ஜோஹோ நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி ஶ்ரீதர் வேம்பு தொடங்கி வைத்தார். கிராமப்புற பெண்கள் தங்களது கைவினைப் பொருட்களை ஆன்லைனில் விற்கலாம். வீட்டில் இருந்தபடியே உலகம் முழுவதும் வர்த்தகம் செய்ய வாய்ப்பு. இந்தியாவின் முதல் கிரமப்புற மின் வணிகத் தளம் "கொற்றவை - இ-காமர்ஸ் ஸ்டோர்* அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஜோஹோ நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி தொடங்கி வைத்தார்.கிராமப்புற பெண்கள் வீட்டில் இருந்தபடியே தங்களது தயாப்புகளை, படைப்புகளை உலகம் முழுவதும் ஆன்லைன் மூலம் விற்பனை செய்ய ஏதுவாக பிரத்தியேக மின் வணிக தளமாக "கொற்றவை" தளம் உருவாக்கப் பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல் முறையாக கிராமப்புற பெண்களுக்காக தொடங்கப்பட்டுள்ள இந்த "கொற்றவை" வணிக தளம் அறிமுக விழா தென்காசி மாவட்டம், கடையம் கோவிந்தபேரியில் அமைந்துள்ள கலைவாணி கல்வி மையத்தில் நடைபெற்றது. கொற்றவை தளத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி காருண்யா குணவதி அனைவரையும் வரவேற்றுப் பேசி, நிறுவனரின் தொலைநோக்குப் பார்வை மற்றும் கொற்றவை தளம் குறித்துப் பேசினார்.இந்த விழாவில் தலைமை விருந்தினராக ஜோஹோ நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி, கிராமங்களின் பாதுகாவலர் பத்மஶ்ரீ ஶ்ரீதர் வேம்பு கலந்து கொண்டு "கொற்றவை" தளத்தை அறிமுகப்படுத்தி வைத்து பேசினார். கொற்றவை இணை நிறுவனர் .ஆனந்தன் அய்யாசாமி கொற்றவை தளத்தில் அடுத்தடுத்த திட்டங்கள், வளர்ச்சிகள் குறித்துப் பேசினார். அவர் பேசுகையில், தென்காசி மாவட்ட பெண்கள் வர்த்தகத்தில் உலக அளவில் ஜொலிக்க கொற்றவை தளம் வழிகாட்டும், என்றார். நிகழ்ச்சியில் தென்காசி மட்டுமல்லாது பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த இல்லத்தரசிகள், மாணவிகள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியில் பேசிய கொற்றவை நிர்வாகிகள், கொற்றவை தளம் எப்படி செயல்படும், இந்த தளத்தின் மூலம் எப்படி வர்த்தகம் செய்யலாம், என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பன போன்ற பல்வேறு தகவகளை விவரித்தனர். குறிப்பாக, கிராமப்புற பெண்கள் தங்களது கைவினைப் பொருட்களை கொற்றவை மூலம் எப்படி விற்கலாம், வீட்டில் இருந்தபடியே உலகம் முழுவதும் வர்த்தகம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி விவரிக்கப்பட்டது. பிரவிகா நன்றி கூறினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

ஈரோடு மாவட்டத்தில் வரும் 11-ந் தேதி

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ள வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு முன்னேற்பாடு பணிகள்

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி நேரில் ஆய்வு



ஈரோடு, ஜூன்.05- தமிழ்நாடு முதலமைச்சர் வருகின்ற *11.06.2025* அன்று ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை விஜயமங்கலம் சங்கச்சாவடி அருகில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை துவக்கி வைக்க உள்ளதைத் தொடர்ந்து, வேளாண்மை - உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.இந்த ஆய்வின்போது, வேளாண்மை - உழவர்நலத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

### முதல்வர் வருகை

தமிழ்நாடு முதலமைச்சர், வருகின்ற *11.06.2025* அன்று வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை துவக்கி வைக்க ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார்கள். வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் தொழில்நுட்பங்கள், புதிய இரக வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர் விதைகள், ஒட்டு இரக பழமரக்கன்றுகள், தென்னங்கன்றுகள் மற்றும் பிறவகை மரக்கன்றுகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விற்பனை, உயர் இரக கால்நடைகள் மற்றும் வளர்ப்பு முறைகள், மீன் வளர்ப்பு, வேளாண்மையில் வங்கி சேவைகள் மற்றும் இவை குறித்த கருத்தரங்கம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு *11.06.2025* மற்றும் *12.06.2025* ஆகிய இரு தினங்களில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் அரங்குகள் அமைக்கும் பணியினை விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியில் ஏறத்தாழ 200-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளது. வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றது. உழவர்கள் சார்ந்த அரசின் அனைத்து திட்டங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள இக்கண்காட்சி வாய்ப்பாக அமைந்துள்ளது.

### வேளாண் கண்காட்சி

மேலும் தொழில்நுட்ப வல்லுநர்கள், அனுபவமிக்க வேளாண் பெருமக்கள், ஏற்றுமதியாளர்கள், உயர் அலுவலர்கள், பேராசிரியர்கள் 25 தலைப்புகளின் கீழ் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களை வழங்கும் வகையில், 2 நாட்கள் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. விவசாயிகள் தங்களது அனுபவங்களையும், கருத்துக்களையும் பகிரக்கூடிய வாய்ப்பு இக்கருத்தரங்கில் உள்ளது. இதனை வேளாண் பெருமக்களும், பொதுமக்களும் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு முதன் முதலாவதாக சென்னையில் நடத்தப்பட்டு, இலட்சக்கணக்கான விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். இரண்டாவதாக திருச்சியில் நடைபெற்றது. தற்பொழுது ஈரோடு மாவட்டத்தில் விவசாயிகளின் மிகுந்த வரவேற்புடன் இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் 55224 விவசாயிகளுக்கு மானியத்தில் சுமார் ரூ.500 கோடி மதிப்பீட்டில் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்களில் காலநிலை மாற்றத்தினை கருத்தில் கொண்டு விவசாயிகளின் இடர்பாடுகள் தமிழ்நாடு அரசின் மூலம் தீர்க்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

ஆய்வின்போது, தோட்டக்கலை-மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), வெங்கடாசலம் (அந்தியூர்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ. சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லோகநாதன், தோட்டக்கலைத்துறை கூடுதல் இயக்குநர் ராம்பிரசாத் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஆசனூர் அருகே

## பசுமாட்டை கடித்து கொன்ற சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க பொதுமக்கள் கோரிக்கை

ஈரோடு, ஜூன்.5 - ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட தாளவாடி வனச்சரகத்தில் யானை, சிறுத்தை, புலி, மான் உள்ளிட்ட வன விலங்குகள் வசித்து வருகின்றன. இதில் சிறுத்தைகள் அடிக்கடி வனப்பகுதியை விட்டு வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து கால்நடைகளை வேட்டையாடி வருவது தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில் தாளவாடி அருகே உள்ள ஒங்கல்வாடி கிராமத்தைச் சேர்ந்தவர் ரவிக்குமார் *(48)*. 5 பசு மாடுகள் வளர்ப்பு வருகிறார். அந்த பகுதியில் உள்ள மேய்ச்சல் நிலத்தில் மாடுகள் மேய்ச்சலுக்கு சென்று வருவது வழக்கம். மாலை செல்லும் மாடுகள் தானாக வீட்டுக்கு வந்து விடும்.

வழக்கம்போல் நேற்று முன்தினம் மாடுகள் மேய்ச்சலுக்கு சென்று இருந்தன. மாலை 4 மாடுகள் வீட்டுக்கு திரும்பி விட்டன. ஆனால் ஒரு பசு மாடு மட்டும் திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த ரவிக்குமார் நேற்று காலை மாடுகள் மேய்ச்சலுக்கு செல்லும் வனப்பகுதிக்குள் சென்று பார்த்தார். அப்போது அங்குள்ள வனப்பகுதியில் அவரது பசு மாடு உடலில் பல்வேறு இடங்களில் கடிபட்ட நிலையில் இறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து ஆசனூர் வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அங்கு பதிவாகி இருந்த கால் தடங்களை ஆய்வு செய்தனர். அப்போது பசுமாட்டை கடித்துக் கொன்றது சிறுத்தை என உறுதி செய்தனர். இதனால் கிராம மக்கள் பீதி அடைந்துள்ளனர். இதுகுறித்து கிராம மக்கள் கூறும்போது, எங்களுக்கு கிராமம் அடர்ந்த வனப்பகுதியில் உள்ளது. எங்களின் முக்கிய தொழிலே கால்நடைகளை வளர்ப்பது தான். எங்கள் கால்நடைகளை வனப்பகுதிக்குள் மேய்ச்சலுக்கு விடுவது வழக்கம். கடந்த சில நாட்களாக வனப்பகுதியை விட்டு வெளியேறும் சிறுத்தை ஒன்று எங்களது கால்நடைகளை தொடர்ந்து வேட்டையாடி வருகிறது. கால்நடைகள் இறப்பால் எங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே இனியும் வனத்துறையினர் தாமதிக்காமல் தொடர் அட்டகாசத்தில் ஈடுபட்டு வரும் சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கிடையே வனப்பகுதியில் கால்நடைகளை கொண்டு மேய்ச்சலுக்கு விட செல்லும் மக்கள், விறகு எடுக்க செல்லும் மக்கள் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும் என வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு
பாகோடு முதல் நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்
ந.க.எண். 134 / 2025 /அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள். 26.05.2025

**SPECIAL FUND 2025-2026**

கன்னியாகுமரி மாவட்டம்,பாகோடு முதல் நிலை பேரூராட்சி 2025-2026-ஆம் வருட **Special Fund** திட்டத்தின் கீழ், கீழ்கண்ட பணி செய்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் வாயிலாக மட்டுமே வரவேற்கப்படுகிறது. இப்பணிக்கு இருஉறை ஒப்பந்தமுறை பின்பற்றப்பட வேண்டும். கீழ்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையை இவ்வலுவலக வங்கி கணக்கு எண். **084601000008372, IFSC Code: IOBA0000846, Executive Officer, Pacode Town Panchayat, Indian Overseas Bank, Melpuram** என்ற கிளையில் மின்னணு பரிவர்த்தனை மூலம் மட்டுமே 17.06.2025 அன்று மாலை 3.00 மணிக்குள் **ECS** மூலம் செலுத்தவும், மேற்படி தொகை செலுத்தியதற்கான ரசீதை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

| வ எண் | திட்டம் மற்றும் வேலையின் பெயர் | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்ததாரரின் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | துண்டத்தாறாவிளை ஆசாரிக்குடிவிளை சாலை, கோதாலிவிளை ஜங்சன் முதல் மேலே கடமக்கோடு சாலை. ஆசாரிக்குடி விளை குறக்குடி குளம் சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 115.00 | 115000.00 | 3 மாதங்கள் | முதல் வகுப்பு |

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி படிவம் இறக்கம் செய்தல் / பெற்றுக்கொள்ளுதல் | 27.05.2025 AT 3.00 PM |
| 2 | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 17.06.2025 AT 3.00 PM |
| 3 | தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 17.06.2025 AT 3.30 PM |
| 4 | பெறப்பட்ட தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளிகள் கூர்ந்தாய்வு குழு முன்னிலையில் மதிப்பிடப்படும் நாள் | 20.06.2025 |
| 5 | விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 25.06.2025 |
| 6 | Price Bid negotiation | 27.06.2025 |

தலைவர்.
பாகோடு முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்
செ.ம.தொ.இ./ 2818 / ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்.
பாகோடு முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**

ஒப்பந்த முறை : மொத்தத் தொகை (இரு உறை முறை)
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.11/TVM-CLE / 2025 -2026 / Dated. 03.06.2025.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் திருவண்ணாமலை பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிக்கு **24.06.2025** அன்று இறுதி நாளாக கொண்டு இணையதள நேரப்படி **பிற்பகல் 3.00 மணிவரையில்** மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள். தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இரு உறை முறையில் (முன்தகுதி விண்ணப்பம் மற்றும் விலை விவர ஒப்பந்தப்புள்ளி) வரவேற்கப்படுகின்றன. **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **06.06.2025 முதல் 24.06.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை** இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் முன்தகுதி விண்ணப்பம் என குறிக்கப்பட்ட உறை (உறை எண்.1) மட்டும் **24.06.2025 அன்று பிற்பகல் 4.00 மணியளவில்** மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை மாவட்டம். போளூர் அரசு மருத்துவமனையில் தாய் மற்றும் சேய் நல பிரிவு கட்டடம் கட்டும் பணி. | 526.50 | ரூ. 2,75,000/- | 11 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி : வகுப்பு II மற்றும் அதற்கு மேல்.
முன் வைப்புத் தொகை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் **(Price Adjustment Clause)** மேற்காணும் பணிக்கு பொருந்தும். முன் தகுதி பெறும் ஒப்பந்தக்காரர்களுக்கு விலை விவர ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் தனியே தெரிவிக்கப்படும். இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ/2784/ஒப்பந்தப்புள்ளி/2025 **கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம், திருவண்ணாமலை–4.**

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டட (க&ப ) வட்டம் திருவாரூர்-1.**
**ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலைமுறை**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:4/ க(க&ப) வட்டம்/திருவாரூர்/2025-26/ நாள்: 03.06.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க&ப) வட்டம், திருவாரூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1 மின்பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. திருவாரூர் மாவட்டத்தில் - 1 மின்பணிக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் **09.06.2025 முதல் 24.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை.**
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் **: 24.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை.**
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **: 25.06.2025 முற்பகல் 11.00 மணி முதல்.**

செ.ம.தொ.இ/2777/ஒப்பந்தப்புள்ளி/2025
**கண்காணிப்புப் பொறியாளர் பொபது., கட்டட (க&ப) வட்டம் திருவாரூர்-1.**

**தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை**
**கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை–630 561**
**ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலைமுறை**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 03க.பொ/ கட்டடம் (க&ப) வட்டம்/சிவ /2025–2026/நாள் : 03.06.2025**

தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் நான்கு பணிகளுக்கு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதியுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து (மின்னணு முறையில் மட்டுமே) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

1) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் **10.06.2025,** மாலை **03.00** மணி முதல் **24.06.2025,** மாலை **03.00** மணி வரை இணையதளத்தில் கிடைக்கும், (மின்னணு முறை)
2) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி **24.06.2025,** மாலை **03.00** மணி வரை (மின்னணு முறை)
3) ஒப்பந்தப்புள்ளி **25.06.2025** மாலை **03.00** மணியளவில் திறக்கப்படும் (மின்னணு முறை)

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் வேலையின் தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை விவரங்கள், பணிக்காலம் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 2775 /ஒப்பந்தப்புள்ளி/2025
**கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை**

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு – 11**
**(மொத்த தொகை – இனவிலை முறை)**
**(இரண்டாம் அழைப்பு)**

**மின்னணு மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.** NIT: 03 / 2025 – 26/கட்டட (க & ப) வட்டம் / ஈரோடு /நாள்.03.06.2025

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தமிழ்நாடு அரசின் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு, அவர்களால் **நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரியில் ஊடாடும் காட்சிப்படுத்தல், உள்இடைச் செய்தித்தொடர்பு மற்றும் சிசிடிவி கண்காணிப்பு அமைப்புகள் ஏற்பாடு செய்யும் பணி–க்கு** தமிழ்நாடு பொதுப்பணித்துறையில் கண்காணிப்புப் பொறியாளர், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சென்னை அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட (Empanelled Radio Firms/ Contractors Category–C) வானொலி நிறுவனங்கள் / ஒப்பந்ததாரர்களிடமிருந்து (வகைப்பாடு–C) இனவிலை முறை மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் **13.06.2025 பிற்பகல் 3.00 மணி** வரை வரவேற்கப்படுகின்றன. பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **13.06.2025 பிற்பகல் 3.30 மணி** அளவில் திறக்கப்படும்.

இதர அனைத்து விபரங்கள் **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்கண்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

செ.ம.தொ.இ./2757/ஒப்பந்தப்புள்ளி/ 2025
**கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து கட்டட (க&ப) ) வட்டம், ஈரோடு – 11**

### 18 ஆண்டுகளுக்கு பிறகு சாம்பியன்:

# பெங்களூரு அணி வீரர்களை நேரில் வரவேற்ற கர்நாடக துணை முதல்வர்

**பெங்களூரு, ஜூன் 05-**

ஐ.பி.எல் போட்டியில் 18 ஆண்டுகளுக்கு பிறகு சாம்பியன் பட்டம் வென்ற பெங்களூரு அணி வீரர்களை கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் நேரில் வரவேற்றார்.



**நாடு முழுவதும்...**

18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி சாம்பியன் பட்டம் வென்றது. அகமதாபாத்தில் நேற்று இரவு நடைபெற்ற இறுதிப்போட்டியில் பெங்களூரு அணி, 6 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தியது. பெங்களூரு அணியின் வெற்றியை நாடு முழுவதும் உள்ள ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். ஐ.பி.எல். வரலாற்றில் முதல் முறையாக, அதாவது 18 ஆண்டுகளுக்கு பிறகு சாம்பியன் கோப்பையை வென்றுள்ள பெங்களூரு அணிக்கு வாழ்த்துகள் குவிந்தவண்ணம் உள்ளன.

**பெருங்களூரு....**

இந்நிலையில் அகமதாபாத்தில் இருந்து விமானம் மூலம் ஆர்சிபி அணி வீரர்கள் நேற்று பெருங்களூரு வந்தடைந்தனர். அவர்களை கர்நாடகாவின் துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் விமானத்தின் அருகிலேயே சென்று பூக்கொத்துடன் வரவேற்றார். அவருடன் விராட் கோலி ஆர்சிபி கொடியை வைத்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

### உலகின் மிக உயரமான

# 'செனாப் ரயில்' பாலத்தை நாளை திறந்து வைக்கிறார் பிரதமர் மோடி

**புதுடில்லி, ஜூன் 05-**

உலகின் மிக உயரமான ரயில் பாலமான செனாப் நதி பாலத்தை, ஜூன் 6ல் பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

1,315 மீட்டர் நீளமுள்ள இந்த பாலம் செனாப் நதியிலிருந்து 359 மீட்டர் உயரத்தில் உள்ளது. மேலும் இது நில அதிர்வு மற்றும் காற்று சக்திகளைத் தாங்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது. இது கத்ரா மற்றும் ஸ்ரீநகர் இடையேயான பயண நேரத்தை கணிசமாகக் குறைத்து ஜம்மு மற்றும் காஷ்மீரில் இணைப்பை மேம்படுத்தும்.

பிரதமர் மோடி, ஜம்மு-காஷ்மீருக்கு ஜூன் 6ம் தேதி செல்கிறார். தொடர்ந்து கட்ராவில் ரூ.46,000 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார். இதில் உலகின் மிக உயரமான ரயில்வே வளைவுப் பாலமான செனாப் பாலம், இந்தியாவின் முதல் கேபிள்-ஸ்டாய்டு ரயில் பாலமான அஞ்சி பாலம் ஆகியவை அடங்கும். அதை தொடர்ந்து பிற்பகல் 12 மணியளவில் வந்தே பாரத் ரயில்களை அவர் கொடியசைத்துத் தொடங்கி வைப்பார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், செங்கல்பட்டு மாவட்டம், கடம்பூர் கிராமத்தில் உலகத்தரத்தில் அமைக்கப்படவுள்ள பல்லுயிர் பாதுகாப்புப் பூங்கா குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

### 2027-ல் 2 கட்டங்களாக சாதிவாரி கணக்கெடுப்பு:

# தொகுதி மறுவரையறை குறித்து தமிழகத்திற்கு தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும்

### மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

**சென்னை, ஜூன் 05-**

தொகுதி மறுவரையறை தொடர்பாக தமிழகத்திற்கு மத்திய அரசு தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். மேலும் நியாயமான தொகுதி மறுவரையறை எனும் கோரிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்று அவர் கூறியுள்ளார்.

இரண்டு கட்டங்களாக 2027-ம் ஆண்டு மார்ச் 1-ம் தேதி முதல் சாதிவாரி கணக்கெடுப்புடன் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த நிலையில் மக்கள்தொகை கணக்கெடுப்பை 2027-ம் ஆண்டுக்குத் தள்ளிப் போட்டு, பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சதித் திட்டத்தை பா.ஜ.க. வெளிப்படையாக அறிவித்துள்ளது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "2026-ம் ஆண்டுக்குப் பிறகு நடத்தும் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பை 2027-ம் ஆண்டுக்குத் தள்ளிப் போட்டு, பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சதித் திட்டத்தை பா.ஜ.க. வெளிப்படையாக அறிவித்துள்ளது.

தொகுதி மறுவரையறை ஆபத்து குறித்து முன்பே நான் எச்சரித்திருந்தேன். அது இப்போது நிருபணமாகி விட்டது. பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்ந்துள்ளதன் மூலம், பழனிசாமி இந்தச் சதித்திட்டம் பற்றிப் பேசாமல் அமைதி காப்பதோடு, இந்தத் துரோகத்துக்குத் துணைபோகிறவராகவும் இருக்கிறார். டெல்லி ஆதிக்கத்தின் முன் அவர் அடிபணிந்துவிட்டது இப்போது தெள்ளத் தெளிவாகியுள்ளது. நியாயமான தொகுதி மறுவரையறை எனும் கோரிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம். மத்திய அரசு எங்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளித்தாக வேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

### வெற்றி கொண்டாட்டத்தில் 11 பேர் பலி:

# மக்களிடம் மன்னிப்பு கோரினார் கர்நாடக மாநில துணை முதல்வர்

**பெங்களூரு, ஜூன் 05-**

பெங்களூரு அணி வெற்றி கொண்டாட்டத்தில் 11 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் மன்னிப்பு கோரியுள்ளார்.

**நீண்ட கால ஏக்கம்...**

18-வது ஐ.பி.எல். தொடரில் அகமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் 6 ரன்கள் வித்தியாசத்தில் ஆர்.சி.பி. இறுதிப்போட்டியை வென்று முதல் முறையாக கோப்பையை கைப்பற்றியது. இந்த வெற்றியின் மூலம் அந்த அணியின் நீண்ட கால ஏக்கம் தீர்ந்துள்ளது. இதனை கொண்டாட பெங்களூருவில் ஏற்பாடு செய்யப்பட்டது.

**பாராட்டு விழா...**

அதன்படி பெங்களூரு அணி வீரர்களுக்கு, கர்நாடக முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் தலைமையில் பாராட்டு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சின்னசாமி மைதானத்தில் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற இருந்த நிலையில் , பெங்களூரு அணியை வரவேற்க ஆயிரக் கணக்கான ரசிகர்கள் திரண்டனர். இந்நிலையில் வீரர்கள் வரும்வரை பொறுமையாக இருக்காமல் ஸ்டேடியத்தின் சுவர்கள் மற்றும் வேலிகளில் ரசிகர்கள் ஏறிச் செல்ல தொடங்கினர்.

**மன்னிக்கவும்....**

இந்த கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியாகினர். 50 மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில், இந்த சம்பவத்துக்கு கர்நாடக முதல்வர், துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் மன்னிப்பு கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, ஆர்.சி.பி. வெற்றிக் கொண்டாட்டத்தில் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை; பெங்களூரு மற்றும் கர்நாடக மக்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் கூட்ட நெரிசல் ஏற்படும் என்றுதான் திறந்தவெளி வாகன உலாவை ரத்து செய்தோம். 5,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கூட்டத்தை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு தர வேண்டும். என தெரிவித்துள்ளார்.

# நாடு முழுவதும் 4,302 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று

### 24 மணி நேரத்தில் 7 பேர் பலி

**புதுடில்லி, ஜூன் 05-**

இந்தியாவில் இதுவரை 4,302 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் 7 பேர் பலியாகி இருக்கின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவி வருகிறது. குறிப்பாக கேரளா, மஹாராஷ்டிரா, மேற்கு வங்கம், தமிழகம் ஆகிய மாநிலங்களில் அதிகம் பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டு உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மஹாராஷ்டிராவில் 4 பேரும், டில்லி, தமிழகம், குஜராத்தில் தலா ஒருவரும் என மொத்தம் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.அதேபோல், 276 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் இதுவரை 4,302 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதுவரை நாடு முழுவதும் மொத்தம் 44 பேர் உயிரிழந்துள்ளனர். இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது: முதியோர், கர்ப்பிணிகள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்கள் பொது இடங்களுக்குச் செல்லும் போது மாஸ்க் அணிய வேண்டும். கொரோனா பரவலால் பதற்றப்படத் தேவையில்லை. மத்திய அரசு கூறிய அறிவுறுத்தல்களையே நாங்களும் கூறி வருகிறோம், என்றார்.

# தமிழ்நாட்டின் பெரிய பல்லுயிர் பூங்கா கடம்பூரில் உருவாகிறது

### முதல்வர் மு.க. ஸ்டாலின் பதிவு

**சென்னை, ஜூன் 05-**

செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூரில் எழில்கொஞ்சும் பல்லுயிர்ப் பூங்கா உருவாகிறது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் மிகப் பெரிய பல்லுயிர்ப் பூங்கா செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூரில் உருவாகிறது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமிழ்நாட்டின் மிகப் பெரிய பூங்காவாக, செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூரில் உருவாகிறது எழில்கொஞ்சும் பல்லுயிர்ப் பூங்கா.

இன்றைய பார்வையில், சங்க இலக்கியங்கள் சொல்லும் ஐந்திணைப்பூங்கா. இன்று நான் வி.ஆர்.-ல் (மெய்நிகர்) கண்டவற்றை, தமிழ்நாட்டு மக்கள் நேரில் காண விரைந்து உருவாக்கிடுங்கள் என்று அமைச்சர்கள் ராஜகண்ணப்பன், தங்கம் தென்னரசு மற்றும் சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூவை குறிப்பிட்டு பதிவிட்டுள்ளார். மேலும் இது தொடர்பான வீடியோ ஒன்றையும் அவர் பகிர்ந்துள்ளார்.

### பக்ரீத் பண்டிகை - முகூர்த்த நாள்:

# தமிழகத்தில் வரும் 8-ம் தேதி வரை 1,584 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, ஜூன் 05-**

பக்ரீத் மற்றும் முகூர்த்த நாட்களையொட்டி வரும் 8 ம்தேதி வரை தமிழகம் முழுவதும் 1,584 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- வரும் 8-ம் தேதி வரை விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க தேிட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நாளை 6-ம் தேதி அன்று 520 பேருந்துகளும், 7ம் தேதி 550 பேருந்துகளும், சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 6ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று 100 பேருந்துகளும், 7-ம் தேதி சனிக்கிழமை 90 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 24 பேருந்துகளும் மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 300 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது . இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 14,413 பயணிகளும் சனிக்கிழமை அன்று 5,990 பயணிகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று 15,680 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# தேவைப்பட்டால் பள்ளிகளில் மாஸ்க் அணிய உத்தரவிடப்படும்

### அமைச்சர் அன்பில் மகேஷ் தகவல்

**சென்னை, ஜூன் 05-**

கோடை விடுமுறை முடிந்து தமிழகத்தில் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், தேவைப்பட்டால் பள்ளிகளில் முகக்கவசம் அணிய உத்தரவிடப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கொரோனா பரவல் மெல்ல அதிகரித்து வருகிறது. மாநிலத்தில் 215 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, கோடை விடுமுறை முடிந்து தமிழகத்தில் கடந்த 2ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தேவைப்பட்டால் பள்ளிகளில் முகக்கவசம் அணிய உத்தரவிடப்படும் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், தமிழகத்தில் கொரோனா பரவல் இருந்தாலும், அந்த அளவிற்கு தீவிரம் இல்லை. தேவைப்பட்டால் பள்ளிகளில் முகக்கவசம் அணிவதற்கு உத்தரவிடப்படும். இருப்பினும் பள்ளிக்கல்வித் துறை சார்பில் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்றார்.

### 8 அணிகள் பங்கேற்கும்

# 9-வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது

**கோவை, ஜூன் 05-**

டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடர் இன்று தொடங்கவுள்ள நிலையில் கோவை, சேலம், நெல்லை, திண்டுக்கல் ஆகிய 4 இடங்களில் போட்டிகள் நடத்தப்படுகிறது. இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் திண்டுக்கல் டிராகன்ஸ்-கோவை கிங்ஸ் அணிகள் மோதுகின்றன.

**8 அணிகள் பங்கேற்பு....**

9-வது டி.என்.பி.எல். போட்டி இன்று ( வியாழக் கிழமை) தொடங்குகிறது. இந்தப் போட்டி தொடர் ஜூலை 6-ந்தேதி வரை நடைபெறுகிறது. இதில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ், கோவை கிங்ஸ் , திண்டுக்கல் டிராகன்ஸ், நெல்லை ராயல் கிங்ஸ், மதுரை பாந்தர்ஸ், சேலம் ஸ்பார்ட்டன்ஸ், திருப்பூர் தமிழன்ஸ், திருச்சி கிராண்டு சோழாஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன.

**இன்று முதல் போட்டி...**

கோவை, சேலம், நெல்லை, திண்டுக்கல் ஆகிய 4 இடங்களில் போட்டிகள் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெறும். லீக் சுற்று 29-ம் தேதியுடன் முடிகிறது. ஜூலை 1-ம் தேதி குவாலிபையர்1' ஆட்டமும், 2-ம் தேதி எலிமினேட்டர் போட்டியும், 4-ம்தேதி குவாலிபையர் 2' ஆட்டமும், இறுதிப்போட்டி ஜூலை 6-ம் தேதியும் நடைபெறுகிறது. கோவையில் இன்று நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் திண்டுக்கல் டிராகன்ஸ்-கோவை கிங்ஸ் அணிகள் மோதுகின்றன.

### குருனால் பாண்டியா சிறப்பாக பந்துவீசினார்:

# தோல்வி குறித்து ஸ்ரேயாஸ் விளக்கம்

**அகமதாபாத், ஜூன் 05-**

குருனால் பாண்டியா சிறப்பாக பந்துவீசினார், அதுதான் ஆட்டத்தின் திருப்புமுனை என்று தோல்வி குறித்து பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் தெரிவித்துள்ளார்.

**பந்துவீச்சு தேர்வு...**

10 அணிகள் பங்கேற்றிருந்த 18-வது ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. இந்த போட்டிக்கான டாசில் வென்ற பஞ்சாப் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 190 ரன்கள் எடுத்தது. பெங்களூரு தரப்பில் அதிகபட்சமாக விராட் கோலி 43 ரன்கள் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங், கைல் ஜேமிசன் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

**184 ரன்கள் மட்டும்...**

தொடர்ந்து 191 ரன் எடுத்தால் சாம்பியன் பட்டத்தை வெல்லலாம் என்ற நிலையில் களம் புகுந்த பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 184 ரன்கள் மட்டுமே எடுத்தது. பெங்களூரு திரில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது. பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ஷஷாங் சிங் 61 ரன்கள் எடுத்தார். ஆர்.சி.பி தரப்பில் அதிகபட்சமாக புவனேஷ்வர், குருனால் பாண்ட்யா தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இந்நிலையில், இந்த போட்டியில் தோல்வி கண்ட பின்னர் பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

**சிறப்பானவர்கள்...**

உண்மையை சொல்ல வேண்டுமென்றால் இந்த தோல்வி வருத்தமாக இருக்கிறது. ஆனால், எங்கள் வீரர்கள் எப்படி வாய்ப்பை எடுத்து கொண்டார்கள் என்பது சிறப்பாக இருக்கிறது. மேலும், எங்கள் அணியில் ஆதரவு ஊழியர்கள் முதல் உரிமையாளர்கள் வரை அனைவரும் சிறப்பானவர்கள். போட்டியை காண வந்துபங்களித்த ஒவ்வொருவருக்கும் நன்றிகள். கடந்த போட்டியை வைத்து பார்க்கும் பொழுது இங்கு 200 ரன்கள் சரியானதுதான் என நினைத்தேன். அவர்கள் அற்புதமாக பந்த வீசினார்கள். குருனால் பாண்டியா குறிப்பாக சிறப்பாக இருந்தார். அவருக்கு நிறைய அனுபவம் இருக்கிறது அதை பயன்படுத்தினார். அதுதான் ஆட்டத்தின் திருப்புமுனை (இங்கிலிஸ் விக்கெட்டை வீழ்த்தியது).

**பெருமைப்படுகிறேன்...**

எங்கள் இளம் வீரர்கள் ஒவ்வொருவர் குறித்தும் நான் பெருமைப்படுகிறேன். அவர்கள் அனைவரும் அச்சமற்ற முறையில் விளையாடினார்கள். நாங்கள் அடுத்த ஆண்டு திரும்பி வந்து சிறப்பாக விளையாடி இந்த கோப்பையை வெல்வோம். எங்களால் மீண்டும் நல்ல கிரிக்கெட்டை விளையாட முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

## விராட் கோலி உருக்கம்

விராட் கோலி அளித்த பேட்டியின்போது, என்ன விசயம் நடந்தபோதும், இந்த அணிக்கு விசுவாசத்துடன் இருந்திருக்கிறேன். வேறு விதத்தில் நினைத்த தருணங்களும் உண்டு. ஆனால், இந்த அணியிலேயே விளையாடினேன். பெங்களூரு அணியுடனேயே என்னுடைய மனம், ஆன்மா இருக்கும். நான் ஐ.பி.எல்.லில் விளையாடும் வரை இந்த அணியிலேயே இருப்பேன். ஒரு குழந்தையை போல் உறங்குவேன். கடைசியாக, என்னுடைய மடியில் இந்த வெற்றியை தந்த கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த நிர்வாகம் மற்றும் அணியானது நேர்மையில் சிறந்து விளங்கியது என்று கூறியுள்ளார்.

## பெங்களூரு அணி பேரணி ரத்து

18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி சாம்பியன் பட்டம் வென்றது. அகமதாபாத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பெங்களூரு அணி, 6 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தியது. பெங்களூரு அணியின் வெற்றியை நாடு முழுவதும் உள்ள ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். ஐ.பி.எல். வரலாற்றில் முதல் முறையாக, அதாவது 18 ஆண்டுகளுக்கு பிறகு சாம்பியன் கோப்பையை வென்றுள்ள பெங்களூரு அணிக்கு வாழ்த்துகள் குவிந்தவண்ணம் உள்ளன.

இந்த நிலையில் பெங்களூரு அணி வீரர்கள் கோப்பையுடன் பெங்களூரு விதான் சௌதா முதல் சின்னசாமி மைதானம் வரை திறந்தவெளி பஸ் பேரணி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் பெங்களூரு அணியின் கோப்பை பேரணி ரத்து செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ரத்து செய்யப்பட்டது.

## ராஜீவ் சுக்லா வேண்டுகோள்

18-வது ஐ.பி.எல். கோப்பையை வென்ற பெங்களூரு அணி வீரர்களுக்கு சின்னசாமி மைதானத்தில் நேற்று பாராட்டு விழா நடைபெற இருந்த நிலையில், பெங்களூரு அணியை வரவேற்க ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டனர். இந்நிலையில் வீரர்கள் வரும்வரை பொறுமையாக இருக்காமல் ஸ்டேடியத்தின் சுவர்கள் மற்றும் வேலிகளில் ரசிகர்கள் ஏறிச் செல்ல தொடங்கினர். இந்த கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியாகினார். 50 மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பாக பிசிசிஐ துணை துணைத் தலைவரும் காங்கிரஸ் எம்.பி.யுமான ராஜீவ் சுக்லா கூறியதாவது, இதற்கு ஆளும் கட்சியைக் குறை கூறக்கூடாது. இதை அரசியலாக்கக் கூடாது. கூட்டம் அதிகமாக இருந்தது, நான் அணியினரிடம் பேசினேன், இவ்வளவு பெரிய கூட்டம் வரும் என்று அவர்களும் நினைக்கவில்லை, இந்த சம்பவம் திடீரென்று நடந்தது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அதிகபட்ச உதவி வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவித்தார்.

### ரூ.500 புழக்கத்தை குறைக்க திட்டம்:

# ஏ.டி.எம்.,களில் ரூ.100, ரூ.200 நோட்டுகளை அதிகம் வைக்க ரிசர்வ் வங்கி புதிய உத்தரவு

**புதுடில்லி, ஜூன் 05-**

ரூ.500 புழக்கத்தை குறைக்க, ஏ.டி.எம்.,களில் ரூ.100, ரூ.200 நோட்டுகளை அதிகம் வைக்க வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

நாட்டில் தற்போது 2000 ரூபாய் நோட்டுக்களை ரிசர்வ் வங்கி வாபஸ் பெற்று விட்டது. மிகக்குறைந்த அளவிலான பணம் மட்டுமே வங்கிக்கு திரும்ப வராமல் உள்ளது. அந்த வகையில் தற்போது புழக்கத்தில் இருக்கும் அதிகபட்ச மதிப்பு கொண்ட ரூபாய் நோட்டு ரூ. 500 தான். இந்நிலையில், வரும் செப்டம்பர் 30ம் தேதிக்குள் அனைத்து ஏ.டி.எம்.,களிலும் 75 சதவீதம் வரை 100 ரூபாய் மற்றும் 200 ரூபாய் நோட்டுகளை வைக்கவும், அடுத்தாண்டு மார்ச் 31ம் தேதிக்குள் 90% வரை 100 ரூபாய் மற்றும் 200 ரூபாய் நோட்டுகளை வைக்கவும் ரிசர்வ் வங்கி அறிவுரை வழங்கி உள்ளது.

பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் குறைந்த மதிப்பு கொண்ட ரூபாய் நோட்டுகள் தேவையான அளவு புழக்கத்தில் இருப்பதை உறுதி செய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், 500 ரூபாய் நோட்டு புழக்கத்தை குறைக்கும் நோக்கத்துடன் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது குறித்து ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கூறியதாவது: இந்தியாவில் டிஜிட்டல் பண பரிவர்த்தனை அதிகரித்துள்ளது. இதனால் குறைந்த மதிப்புள்ள ரூ.100, ரூ.200 நோட்டுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதுவே, ஏ.டி.எம்.,களில் ரூ.100, ரூ.200 நோட்டுகளை அதிகம் வைக்கும் உத்தரவுகளின் நோக்கமாகும். ரூ.500 நோட்டுகள் தொடர்ந்து சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும். தொடர்ந்து பயன்பாட்டிலும் இருக்கும். அதைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கு நேரத்தை மாற்றக்கோரிய வழக்கு தள்ளுபடி

**புதுடெல்லி, ஜூன் 05-**

திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கு நேரத்தை மாற்றக்கோரிய வழக்கை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலிலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இந்த கோவிலில் குடமுழுக்கு விழா வரும் 7-ந்தேதி நடைபெற உள்ளது. இதற்கான பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனிடையே, திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கு நேரத்தை நண்பகலுக்கு மாற்றக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, ஏற்கனவே இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவில் தலையிட முடியாது என்று தெரிவித்து, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

# 29 வழக்குகளில் ரவுடிகளுக்கு தண்டனை: தமிழ்நாடு டி.ஜி.பி. சங்கர் ஜிவால் தகவல்



**சென்னை, ஜூன் 05-**

தமிழ்நாட்டில் சரித்திர பதிவேடு ரவுடிகள் மற்றும் பழிக்குப் பழிவாங்கும் கொலைகளைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு டி.ஜி.பி. சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு டி.ஜி.பி. சங்கர் ஜிவால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- தமிழ்நாடு காவல் துறை சார்பில் சரித்திர பதிவேடு ரவுடிகள் மற்றும் பழிக்குப் பழிவாங்கும் கொலைகளைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு காவல்துறையில் துணை கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அதிகாரிகள் தலைமையில் பிரத்யேக மண்டல அளவிலான சரித்திர பதிவேடு ரவுடிகள் கண்காணிப்பு குழுக்கள், வடக்கு, மத்திய, மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களிலும், மாநகர ஆணையரகங்களிலும் அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுகின்றன.

மாநகரங்களில் துணை காவல் ஆணையர்கள் (தலைமையகம்) மற்றும் மாவட்டங்களில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் (தலைமையகம்) ஆகியோர் சரித்திர பதிவேடு ரவுடிகளுக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்குகளின் நீதிமன்ற முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து, விசாரணையை விரைவுப்படுத்தி தண்டனை பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

விசாரணையின் முடிவுறும் தருவாயில் உள்ள நிலுவை வழக்குகள் மற்றும் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ள வழக்குகள் அடையாளம் காணப்பட்டு, வழக்கு விசாரணையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டன. 2025-ம் ஆண்டில், இதுபோன்று 376 வழக்குகள் அவற்றின் விசாரணையை கூர்ந்து கண்காணிக்க அடையாளம் காணப்பட்டுள்ளன.

2024-ம் ஆண்டில், 10 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட தண்டனை வழங்கப்பட்டு 150 சரித்திர பதிவேடு ரவுடிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர், இது கடந்த 12 ஆண்டுகளைவிட மிக அதிக அளவாகும். இதுவரை (ஏப்ரல், 2025 வரை) சரித்திர பதிவேடு ரவுடிகளுக்கு எதிரான 29 முக்கிய வழக்குகள் தண்டனையில் முடிவடைந்துள்ளன.

மேற்கு மண்டலத்தில் திருப்பூர், தர்மபுரி, கோயம்புத்தூர் & கிருஷ்ணகிரி மாவட்டங்கள் மற்றும் திருப்பூர் நகரம் ஆகியவற்றில் 5 வழக்குகள்; மத்திய மண்டலத்தில் பெரம்பலூர், மயிலாடுதுறை (3), திருவாரூர் மற்றும் திருச்சி மாவட்டங்கள் ஆகியவற்றில் 6 வழக்குகள்; தென் மண்டலத்தில் திருநெல்வேலி (5), தென்காசி, விருதுநகர் (3), தூத்துக்குடி (2), திண்டுக்கல் (2), ராமநாதபுரம் (3) கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் மதுரை நகரம் ஆகியவற்றில் 18 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்துள்ளன.

தென் மண்டலத்தில் சரித்திர பதிவேடு ரவுடி கொலைகளில் பொது விமர்சனங்களை ஏற்படுத்தும் வழக்குகளும் கருத்தில் கொள்ளப்பட்டன. இத்தகைய கொலை வழக்குகளை முறையாக கண்காணித்ததன் விளைவாக, 18 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்துள்ளன. நீதிமன்ற வழக்கு விசாரணையை கண்காணித்தல் மற்றும் தண்டனை பெறுவதில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம், கொலைகள், குறிப்பாக சரித்திர பதிவேடு ரவுடிகள் மற்றும் பழிக்குப் பழி கொலைகள் குறைவதற்கு முக்கிய பங்களித்துள்ளது. சரித்திர பதிவேடு ரவுடிகள் மற்றும் சமூக விரோத சக்திகளுக்கு எதிரான இந்த முறையான, முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள், தமிழ்நாட்டில் பழிக்குப் பழி மற்றும் சரித்திர பதிவேடு ரவுடிகள் கொலைகளில் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து நல்ல பலனைத் தந்துள்ளன. பாலியல் வன்கொடுமை மற்றும் கொலைகள் போன்ற பிற வழக்குகளிலும் இதேபோன்ற நடவடிக்கை பின்பற்றப்படுகிறது.

மதுரை மாநகரில் 8.7.2021 அன்று B4 கீரைத்துறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சம்பவ இடத்தில் 28 கிலோ கஞ்சா வைத்திருந்ததாக முருகன் மற்றும் சிலர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அவ்வழக்கானது சொத்துக்களுடன் சேர்த்து 28 கிலோ கஞ்சா, இரு சக்கர வாகனம், ஒரு கார் மற்றும் ரூ.10 ஆயிரம் ரொக்கம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இந்த வழக்கில் 31.12.21 அன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு கொலை வழக்கு உட்பட 29 குற்ற வழக்குகளில் தொடர்புடையவர் மற்றும் மதுரை மாநகர், அண்ணாநகர் காவல் நிலையத்தில் சரித்திரபதிவேடு அவருக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

விசாரணையை திறம்பட கண்காணித்ததன் காரணமாக அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. மதுரை மாநகர், திருநகர் காவல் நிலையத்தில் 12.10.2016 அன்று முன்விரோத வழக்கான பஷீத் அகமது (வயது 30) என்பவரது கொலை வழக்கு குற்றச்சாட்டில் தொடர்புடைய ராஜேஷ் (30) மற்றும் திரு. விஷ்வா(18) என்பவர்களுக்கு ஆயுள் தண்டனையும் மற்றும் ரூ.1,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிக்கன் மகன் பெருமாள் என்பவர், ராஜன் மகன் செல்வராஜ் என்பவரால் கொலை செய்யப்பட்டார். இதில் வைகுண்டம் என்பவர் குற்றம் சாட்டப்பட்ட செல்வராஜுக்கு எதிராக சாட்சியம் அளித்தார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்ற எட்டு குற்றவாளிகளுடன் சேர்ந்து வைகுண்டத்தைக் கொலை செய்தனர். இவ்வழக்கில் நீதிபதி 6.3.2025 அன்று செல்வராஜுக்கு மரண தண்டனையும், 4 கூட்டாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் விதித்தார். மீதமுள்ள 3 குற்றவாளிகளுக்கு 2 மாத சிறைத்தண்டனையும் ரூ.5 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வீரவநல்லூர் காவல் நிலைய எல்லையில் சுப்பையா(38) மற்றும் 20 பேர் சேர்ந்து முன் விரோதம் காரணமாக ரத்தினவேல் பாண்டியன் என்பவரை கொலை செய்தனர். முன்விரோதம் காரணமாக அந்த காவல் நிலைய எல்லையில் பதிவான 5 கொலை வழக்குகளிலும், 11 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும், 1 குற்றவாளிக்கு மரண தண்டனையும், 2021-ம் ஆண்டு நடந்த கொலை வழக்கில் 3 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சின்னாளம்பட்டி காவல் நிலையத்தில், சரித்திர பதிவேடு ரவுடிகள் ராஜா, பிரகாஷ், சரத்குமார் ஆகிய 3 பேர் 2021-ம் ஆண்டு ராஜபாண்டி என்பவரை கொலை செய்தனர். இவ்வழக்கில் 5.4.2025 அன்று ராஜா மற்றும் சரத்குமார் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் பிரகாஷ் என்பவருக்கு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை மற்றும் ரூ.65 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த 2022-ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கயத்தார் காவல் நிலைய எல்லையில், முன்பகை காரணமாக காளிபாண்டி என்பவர் மாரியப்பன் என்பவரை கொலை செய்துள்ளார். இவ்வழக்கில் 16.4.2025 அன்று மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையும் ரூ.5 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நத்தம் அருகே
# முத்தாலம்மன் கோவில் திருவிழா



**நத்தம், ஜூன் 05-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சிறுகுடி கிராமம் ஒடுகம்பட்டியில் மந்தை முத்தாலம்மன் கோவில் திருவிழா நடந்தது.

இதில் நேற்று முன்தினம் இரவு நல்லகண்டத்தில் இருந்து முத்தாலம்மன் தீவட்டி பரிவாரங்கள், வான வேடிக்கைகளுடன் ஊர்வலமாக மேளதாளம் முழங்க ஒடுகம்பட்டி கோவில் முன் உள்ள மந்தைக்கு சென்றது.

பின்னர் கோவிலுக்குள் சென்ற அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது. தொடர்ந்து பக்தர்கள்மாவிளக்கு, விளக்கு பூஜை கிடாய்கள் வெட்டி தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். பின்னர் நேற்று மாலை வர்ணக் குடைகளுடன் பக்தர்கள் புடைசூழ அம்மன் பூஞ்சோலை செல்லும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. விழாவில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். திருவிழாவிற்கான ஏற்பாடுகளை ஒடுகம்பட்டி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# திருமங்கலத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் விளைபொருட்கள் விற்று சாதனை

**திருமங்கலம், ஜூன் 05-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் விடத்தக்குளம் ரோட்டில் அமைந்துள்ள திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இ-நாம் ஏலம் மூலம் இதுவரை 7000 மெட்ரிக் டன்கள் விளைபொருட்கள் ரூ 24 கோடிக்கு விற்று சாதனை நிகழ்த்தப்பட்டு உள்ளது.

இதன் ஒரு பகுதியாக கடந்த வாரம் சிவகங்கை மாவட்டத்தில் இருந்து கோரைக் கிழங்கு திருவண்ணாமலை மாவட்டத்திற்கு விற்று தரப்பட்டது. குளத்துவாய்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மூன்று விவசாயிகளின் நித்திய கல்யாணி விருதுநகருக்கு விற்று தரப்பட்டது.விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயியின் செம்பருத்திப்பூ மதுரைக்கு விற்று தரப்பட்டது. வாடிப்பட்டியை சேர்ந்த நான்கு விவசாயிகளின் தூயமல்லி நெல் சென்னைக்கு விற்று தரப்பட்டது. திருமங்கலம் மற்றும் செங்கப்படை கிராமத்தைச் சேர்ந்த இரண்டு விவசாயிகளின் வரகு மற்றும் குதிரைவாலி கர்நாடக மாநிலம் மைசூருக்கு விற்று தரப்பட்டது.

மேலும் வாடிப்பட்டியைச் சேர்ந்த ஒரு விவசாயியின் 16380 கிலோ உமா மட்டை நெல் ஏலத்தின் மூலம் ரூ.346765-க்கு வர்த்தகம் நடைபெற்றது.காரியாபட்டி மற்றும் நேசனேரி கிராமத்தைச் சேர்ந்த இரண்டு விவசாயிகளின் 1977 கிலோ ஏலம் மூலம் ரூ.76125-க்கு வர்த்தகம் நடைபெற்றது. ஓடைப்பட்டி மற்றும் எஸ் பி நத்தம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நான்கு விவசாயிகளின் 13,827 கிலோ இருங்குசோளம் ஏலம் மூலம் ரூ.51,3647- க்கு வர்த்தகம் நடைபெற்றது.குப்பல்நத்தம், கர்சல்காலாம்பட்டி மற்றும் லாலாபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மூன்று விவசாயிகளின் 10318 கிலோ மக்காச்சோளம் ஏலம் மூலம் ரூ. 2,54,4605- க்கு வர்த்தகம் நடைபெற்றது.

திருமங்கலம் மற்றும் கோவில்பட்டியை சேர்ந்த மூன்று விவசாயிகளின் 7,223 கிலோ குதிரைவாலி ஏலம் மூலம் ரூ. 2,57,666-க்கு வர்த்தகம் நடைபெற்றதுடன் மொத்தம் ரூ. 37,07,490-க்கு வர்த்தகம் நடைபெற்றது.அத்துடன் விளைபொருட்கள் விற்பனை தொடர்பான விபரங்களுக்கு கீழ் கண்ட எண்களில் கண்காணிப்பாளர் 9025152075,மேற்பார்வையாளர் 9600802823, சந்தை பகுப்பாய்வாளர் 8754379755, தரவு பதிப்பாளர் 9047155641 ஆகியோரை தொடர்பு கொண்டு பயன் பெற்றிடலாம்.

# திருமங்கலம்-ஒத்தக்கடை இடையே மெட்ரோ ரயில் திட்டம் காலதாமதம்

**திருமங்கலம், ஜூன் 05-**

மதுரை மாவட்டத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி போக்குவரத்து நெரிசலை குறைத்திடும் வகையில் ரூ.11,368 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 31 கி.மீ தூரத்திற்கு திருமங்கலம் முதல் ஒத்தக்கடை வரை அமைக்கப்படவுள்ள மெட்ரோ ரயில் திட்ட பணிகள் துவங்கிடாமல் தொடர்ந்து காலதாமதமாகி வருவதால் மதுரை மாவட்ட மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

மதுரை மாவட்டத்தில், திருமங்கலம் முதல் ஒத்தக்கடை வரையிலான 31 கி.மீ தூரம் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்திட அரசு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு ரூ.11,368 கோடி செலவாகிடும் என திட்டமதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.அதன்படி இந்த திட்டம் திருமங்கலம் நகரில் தொடங்கி கப்பலூர் டோல்கேட், தருமத்துப்பட்டி, தோப்பூர்(எய்ம்ஸ்), திருநகர், திருப்பரங்குன்றம், பசுமலை, வசந்தநகர்,மதுரா கல்லூரி,தெற்குவாசல், கோரிப்பாளையம், காளவாசல், வழியாக காவல் ஆணையர் அலுவலகம், கோ.புதூர்,மாட்டுத்தாவணி,உத்தங்குடி, உயர்நீதி மன்ற கிளை என 31கி.மீ தூரம் பயணித்து ஒத்தக்கடையில் முடிவடைகிறது. ரூ.11,368 கோடியிலான இந்த திட்டம் பணிகள் துவங்கிய நான்கு ஆண்டுகளில் நிறைவடைந்து 25கி.மீ முதல் 60கி.மீ வேகத்தில் அதிகளவு பாதுகாப்பு அம்சங்களுடன் மெட்ரோ ரயில்களை இயக்கிடும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே மதுரை மாவட்ட மக்களின் நீண்டகால நனவினை நனவாக்கிடும் வகையில் தமிழக அரசின் 2023-2024-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தின் மூலம் திருமங்கலம்-ஒத்தக்கடை இடையே 31 கி.மீ தூரத்திற்கு மெட்ரோ ரயில்களை இயக்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதற்காக சென்னை மெட்ரோ ரயில் திட்ட அதிகாரிகள் மேற்பார்வையில் வழித்தட ஆய்வும், திட்டப் பாதையின் வழிநெடுக மண் பரிசோதனையும் செய்து முடிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மதுரை மெட்ரோ ரயில் திட்ட பணிகள் விரைவாக தொடங்கிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் பல்வேறு கட்ட ஆய்வுகள் முடிந்தும் மதுரை மெட்ரோ ரயில் திட்ட பணிகள் துவங்கிடாமல் தொடர்ந்து காலதாமதமாகி வருகிறது.

எனவே மதுரை மாவட்ட போக்குவரத்து நெரிசலுக்கு முற்றுப்புள்ளி வைத்திடும் வகையில் ரூ.11,368 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வரும் திருமங்கலம்-ஒத்தக்கடை இடையிலான மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தினை தொய்வின்றி விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்பதே மதுரை மாவட்ட மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மேலூரில் புதிய திரையரங்கத்தை அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார்



**மேலூர், ஜூன் 05-**

மதுரை மாவட்டம் மேலூரில் மிகவும் பழமை வாய்ந்த (திரைப்பட நடிகர் ராமராஜன் பணியாற்றிய) கணேஷ் திரையரங்கம் மேலூர் பகுதி மக்களின் முக்கிய பொழுதுபோக்கு இடமாக உள்ளது. மேலூர் மக்களின் 50 வருட பொழுதுபோக்காக கணேஷ், கணேஷ் டீலக்ஸ், கணேஷ் பாரடைஸ் ஆகிய மூன்று தியேட்டர்கள் நகரின் முக்கிய பகுதியில் இயங்கி வந்தது. தற்போது கணேஷ் டீலக்ஸ் மராமத்து செய்யப்பட்டு மேலூர் கணேஷ் சினிமாஸ் - புதுப்பொலிவுடன் 4 திரைகள் உள்ளன. முதலில் 3 திரைகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.அதிநவீனமான தொழில்நுட்பத்துடன், பிரமாண்டமாக மேலூர் கணேஷ் சினிமாஸ் திரையரங்கத்தை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி ரிப்பன் வெட்டி திறந்து வைத்து முதல் சினிமா பட காட்சியை தொடங்கி வைத்து அவர், சிறிது நேரம் திரையரங்கத்தில் அமர்ந்து காட்சியை கண்டு ரசித்தார். அதனைத் தொடர்ந்து சினிப்பிரியா தியேட்டர் உரிமையாளர் பி.கே.எம்.செல்லையா, மேலூர் மெடிக்கல் சென்டர் டாக்டர். பூபதி ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி வைத்தனர்.

தியேட்டர் புதிய உள் கட்டமைப்புடன், நவீன அலங்கார அமைப்புகளுடன், குளிர்சாதன வசதியுடன், நவீன இருக்கை, படுக்கை வசதிகளுடன் உள்ளது. இந்நிகழ்ச்சியில் மேலூர் எம்.எல்.ஏ பெரியபுள்ளான், முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசன், முன்னாள் யூனியன் சேர்மன்கள் பொன்னுச்சாமி, வெற்றிச்செழியன், அதிமுக மாவட்ட கழக பொருளாளர் அம்பலம், மலம்பட்டி மணிவாசகம், மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், மலம்பட்டி ரவி, மதுரை ராமநாதபுரம் திரையரங்க உரிமையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள், மேலூர் வர்த்தக சங்கத்தினர், மேலூர் முல்லைப் பெரியாறு ஒருபோக பாசன விவசாய சங்கத்தினர், தொழிலதிபர்கள், மேலூர் தொழில்முனைவோர் கூட்டமைப்பு, த.வெ.க மாவட்ட பொருளாளர் மணிமாறன், திரைப்பட சினிமா ரசிகர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

மேலூர் பகுதி மக்களுக்கும், நத்தம், சிங்கம்புணரி, திருப்பத்தூர் உட்பட சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மக்களுக்கும் ஒரே நேரத்தில் நான்கு சினிமா படங்களை நவீன வசதிகளுடன் பார்ப்பதற்கு மேலூர் கணேஷ் சினிமா ஒரு சிறந்த இடமாகும். மேலூர் கணேஷ் தியேட்டர் உரிமையாளர் முருகன் மற்றும் அவரது குடும்பத்தினர் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி, நினைவு பரிசுகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

# ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உலக சுற்றுச்சூழல் தின உறுதிமொழி ஏற்பு



**ஒட்டன்சத்திரம், ஜூன் 05-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் தூய்மை மிஷன் திட்டத்தின் கீழ் அரசு அலுவலகங்களில் பயன்படுத்தப்படாத உபயோகமற்ற பொருள்களை தரம் பிரித்து அப்புறப்படுத்தும் பணிக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நகராட்சி ஆணையாளர் மு. ஸ்வேதா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சுகாதார ஆய்வாளர் ராஜமோகன், கணக்காளர் சரவணன், மேலாளர் ரவி, பொதுப்பணி மேற்பார்வையாளர் ராம்ஜி, வருவாய் ஆய்வாளர் விஜய் பால்ராஜ், உதவியாளர் அருள் முருகன், உள்ளிட்ட நகராட்சி ஊழியர்கள்,சதன் நிறுவன பணியாளர்கள் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நகராட்சி ஆணையாளர் ஸ்வேதா தலைமையில் நடைபெற்றது

## அலங்காநல்லூரில்
# தி.மு.க. சார்பில் குழந்தைகள் காப்பகத்தில் கலைஞர் கருணாநிதி பிறந்த நாள் விழா



**அலங்காநல்லூர், ஜூன் 05-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் திமுக முன்னாள் தலைவரும் தமிழக முன்னாள் முதல்வருமான கலைஞர் கருணாநிதி பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. தொடர்ந்து தி.மு.க. ஒன்றியம் சார்பில் சின்னஊர்சேரி மற்றும் எரம்பட்டி கிராமங்களில் அமைந்துள்ள குழந்தைகள் காப்பகத்தில் தி.மு.க. கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியம் சார்பில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து குழந்தைகளுக்கு இரவு உணவும் ஏற்பாடு செய்து இருந்தனர் இதில் ஒன்றிய செயலாளர் தன்ராஜ் பரந்தாமன் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு உணவை பரிமாறி வழங்கினர்.

குழந்தைகள் காப்பகத்துக்கு வருகை தந்த தி.மு.க. நிர்வாகிகளை காப்பகத்தின் நிர்வாகத்தினர் வரவேற்றனர். முன்னதாக தமிழக முதல்வர் ஸ்டாலின் குடும்பத்திற்காக சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர் சரந்தாங்கி முத்தையன், ஒன்றிய துணைச் செயலாளர் அருண்குமார், ஒன்றிய பொருளாளர் சுந்தர்ராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, செந்தில்குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தவசதீஷ், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ராஜாஜி, இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த், சிறுபான்மைஅணி ரியாஸ்கான், சின்னஊர்சேரி கிளைச் செயலாளர் தியாகு, மற்றும் முடுவார்பட்டி சேகர், பொறியாளர் அணி பாலகிருஷ்ணன் உள்பட ஒன்றிய, கிளை, அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நத்தம் பகுதியில் கலைஞர் பிறந்தநாள் விழா



**நத்தம், ஜூன் 05-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே வத்திபட்டியில் தெற்கு ஒன்றிய திமுக சார்பாக மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார் தலைமை தாங்கினார்.முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம்,வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி,நகர செயலாளர் ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து வத்திபட்டி பகுதியில் திமுக கட்சி கொடி ஏற்றப்பட்டு கலைஞரின் திருவுருவ படத்திற்கு மாலைகள் அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அன்னதானம் வழங்கபட்டது. இதில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சாத்திபவுர்,அழகிநேரு, தேனம்மாள் தேன்சேகர், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சிவா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இப்ரில் ஆசித், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராஜகோபால், வடக்கு ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், நகர இளைஞரணி அமைப்பாளர் சேக்சிக்கந்தர் தாரிக் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதைப்போலவே நத்தத்தில் பஸ்நிலைய ரவுண்டானா முன்பு நகர செயலாளர் ராஜ்மோகன் தலைமையிலும், செந்துறையில் வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி தலைமையிலும் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தபட்டு இனிப்புகள் வழங்கபட்டது.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் எஸ.ஓ.எல். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 175 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள காற்று பிரித்தெடுப்பு ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச்செயலகத்தில், இந்தியாவிற்கான சிங்கப்பூர் நாட்டின் தூதர் சைமன் வோங் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம், சிங்கப்பூர் நாட்டு துணைத் தூதர் எட்கர் பெங், அரசியல் தூதர் வைஷ்ணவி வாசுதேவன், செயலாளர் (அரசியல்) ஹர்ஷ்வீர் சிங் சதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




மதுரை நீதிமன்றம் உட்பட 119 புதிய நீதிமன்றம் உருவாக்கியது மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளை அமைத்த கலைஞர் கருணாநிதியை சிறப்பிக்கும் வகையிலும், செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னை உயர்நீதிமன்றம் எதிரிலுள்ள ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கத்தில் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மேயர் ஆர்.பிரியா, என்.ஆர்.இளங்கோ எம்.பி., மற்றும் சட்டத்துறை தலைவர் இரா.விடுதலை ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் தலைமைக்கழக வழக்கறிஞர்கள் மற்றும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் வளாகத்தில், 2025-26-ம் ஆண்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக்கோரிக்கை அறிவிப்பு, நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் மற்றும் கொழுப்புமிகு கல்லீரல் நோய் விழிப்புணர்வு பயிற்சி முகாமை தொடங்கி வைத்து விழா பேரூரையாற்றினார். இந்நிகழ்வில் துறை சார்ந்த அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.300 கோடியில் புதிய 'ரோபோடிக்...(1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

**300 பொறியாளர்கள்...**

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த அஜைல் ரோபோட்ஸ் எஸ்.இ. நிறுவனம், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, புதிய தலைமுறை தானியங்கு தீர்வுகளை வழங்கும் நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம், தற்போது, அனைத்துத் துறைகளுக்கும் பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தித் தொழிற்சாலையை, காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக் கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் நிறுவியுள்ளது. இத்திட்டத்தில், 300 கோடி ரூபாய் முதலீட்டில் 300 உள்ளூர் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**ஆக்சிஜன் உற்பத்தி...**

எஸ்.ஓ.எல். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், இத்தாலி நாட்டைச் சேர்ந்த எஸ்.ஓ.எல். மற்றும் இந்தியாவின் சிக்ஜில்சால் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு நிறுவனம் ஆகும். ராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள இந்நிறுவனம், தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொண்டு வருகிறது.

2019 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, 100 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது 200 கோடி ரூபாய் முதலீடு என்ற வகையில், இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுடன் காற்று பிரித்தெடுக்கும் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது.

**முதலீட்டாளர்கள்...**

இந்நிறுவனத்தின் காற்று பிரித்தெடுப்பு ஆலை அமைப்பதற்கு முதல்வரால் கடந்த 19.07.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது பணி நிறைவடைந்து,

175 கோடி ரூபாய் முதலீட்டில், காற்று பிரித்தெடுக்கும் ஆலை நிறுவப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது உறுதியளித்த முதலீடுகள் இதில் அடங்கும். 20 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு ஆலைகளும் முதல்-அமைச்சரால் இன்றையதினம் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ராஜ்யசபா தேர்தல் தொடர்பாக சென்னையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நேற்று பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம்

**சென்னை, ஜூன் 05-**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அக்கட்சியின் எம்.எல்.ஏக்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் அ.தி.மு.க. சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள 2 வேட்பாளர்களுக்கு முன்மொழிவு மற்றும் வழிமொழிவுக்கான மனுக்களில் எம்.எல்.ஏக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் கூட்டணியை உறுதி செய்வது, கட்சியை பலப்படுத்துவது, பொதுக்குழு, மாநாடு , கட்சி நிர்வாகிகளை ஊக்கப்படுத்துவது என தேர்தலை எதிர்கொள்ள அனைத்துக் கட்சிகளும் தயாராகி வருகின்றன. அந்தவகையில் அண்மையில் கூட மதுரையில் திமுக பொதுக்குழு கூட்டப்பட்டு 2026 சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே போன்று அ.தி.மு.க.வும் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக கட்சியை வலுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வரும் பழனிசாமி, நேற்று சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அதன்படி சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நேற்று காலை 10 மணியளவில் எம்.எல்.ஏக்கள் கூட்டம் தொடங்கி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் மற்றும் மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர். இதில் அடுத்த ஆண்டு நடைபெற்வுள்ள சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது, மக்கள் பிரச்சனைகளை முன்னிறுத்தி எம்.எல்.ஏக்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று பழனிசாமி ஆலோசனைகள் வழங்கியதாக தகவல் வெளியாகியுள்ளது.

வருகிற 19-ம் தேதி நடைபெறவுள்ள மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் வாக்களிப்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது. நேற்றைய கூட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள 2 வேட்பாளர்களுக்கு முன்மொழிவு மற்றும் வழிமொழிவுக்கான மனுக்களில் எம்.எல்.ஏக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது.




10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, த.வெ.க., சார்பில் நேற்று மாமல்லபுரம், தனியார் மண்டபத்தில் நடைபெற்ற 2-ம் கட்ட விருது வழங்கும் விழாவில் மாணவி ஒருவருக்கு த.வெ.க. தலைவர் விஜய் பொன்னாடை போர்த்தி, சான்றிதழ் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

# மத்திய அமைச்சர் அமித்ஷா ஜூன் 8-ல் மதுரை வருகை

**மதுரை, ஜூன் 05-**

மத்திய அமைச்சர் அமித்ஷா வரும் 8-ம் தேதி மதுரை வருகிறார். அப்பொழுது தென் மாவட்ட பா.ஜ.க. நிர்வாகிகளை சந்தித்து முக்கிய ஆலோசனையில் ஈடுபடுகிறார்.



தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான பணிகளை தலைமை தேர்தல் ஆணையம் இந்த வாரம் அதிகாரப்பூர்வமாக தொடங்கி உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்களே இருந்தாலும் இப்போதே எல்லா கட்சிகளும் தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டன. ஆளும் கட்சியான தி.மு.க. ஏற்கனவே பிரசாரத்தை தொடங்கி விட்டதாக கட்சியின் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

2026-ம் ஆண்டு தேர்தலில் 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று தி.மு.க. இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்கான பணிகளை தீவிரப்படுத்தும் வகையில் மதுரையில் கடந்த 1-ம் தேதி தி.மு.க. பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் ஒவ்வொரு தொகுதியிலும் 30 சதவீத வாக்காளர்களை திமுக உறுப்பினர்களாக்க சிறப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதற்கிடையே அ.தி.மு.க. சட்டசபை தேர்தலை கருத்தில் கொண்டு களப்பணிகளை முன்னெடுத்து வருகிறது. விரைவில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது. அவரது இந்த சுற்றுப் பயணம் மதுரை அல்லது கன்னியாகுமரியில் இருந்து தொடங்குவதற்கு வாய்ப்பு உள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். சட்டமன்ற தொகுதி வாரியாக நகர்ப்புறங்கள் கிராமப்பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரச்சார திட்டங்களைவகுக்குமாறு அ.தி.மு.க. மூத்த தலைவர்களிடம் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

இந்தநிலையில், அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க.வும் 2026-ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலை முக்கியமானதாக கருதுகிறது.

இந்த தேர்தலில் தமிழகத்தில் வலுவாக காலூன்ற வேண்டும் என்பது பா.ஜ.க. மேலிட தலைவர்களின் குறிக்கோளாக உள்ளது. இந்தகுறிக்கோளை எட்டுவதற்காகவே அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியை கடந்த மாதம் சென்னைக்கு வந்து மத்திய அமைச்சர் அமித்ஷா உருவாக்கினார். இந்த கூட்டணியை மேலும் வலுவடைய செய்வதற்கு அவர் தொடர்ந்து ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

இதற்காக மத்திய அமைச்சர் அமித்ஷா தமிழகத்திற்கு வரவும் திட்டமிட்டுள்ளார். முதல் கட்டமாக வருகிற 8-ம் தேதி மதுரைக்கு வர இருக்கிறார். அப்போது அவர் தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளை சந்தித்து உரையாடுகிறார். அன்று மதியம் 3 மணிக்கு நடைபெறும் தென் மாவட்ட அளவிலான நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்கும் அமித்ஷா தேர்தல் கூட்டணி, சட்டமன்ற தேர்தல் தொகுதிகள் வெற்றி விவரம், வியூகம் அமைப்பது குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கெனவே தி.மு.க. பொதுக்குழு மதுரையில் நடைபெற்ற நிலையில், அமித்ஷா வருவது மதுரை அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.